
# குண்டுசி

ஏப்ரல் - 83



விலை ரூ. 1-20


பண்டிகை நாட்களில் நெஞ்சை அள்ளும் ராஜேஸ்வரியின்
புத்தாடைகளை அணிந்து உங்கள் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குங்கள்
பட்டு ஜவுளிகளுக்கு...
ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்
121, ராஜவீதி. கோவை.1
போன் : 25859
நவநாகரீக ஜவுளிகளுக்கு...
உஷா சாரிபாரடைஸ்
333, ராஜ வீதி
கோயமுத்தூர்-641001
போன் : 33369
OSR


# கரூர் வைஸ்யா பாங்க் தெரிவிக்கும் தமிழ்ப் புத்தாண்டு தின

# வாழ்த்துக்கள்

## நம்பிக்கையுடன் திட்டமிடுவோம்— ஒளிமயமான எதிர்காலம் நமக்குண்டு என்போம்

வறட்சிநிலையும் பறருக்குறைகளும் எனறும நீடிககப்போவதிலலை. விரைவிலேயே நமக்கு நலல நாட்கள் வரப்போவது நிச்சயம். அவற்றைக கொண்டாடி மகிழ்நதிட இப்போதே ஆயததமாகுங்கள்—திடடமிட்டு இபபோதிலிருநதே சேமிக்கத் துவங்குஙகள். கரூர் வைஸயா பாஙக்கிலுளள நாங்கள், உஙகள் தேவைகளுககு ஏற்ப பல்வேறு சேமிப்புத் திடடஙகளை வழங்குகிறோம.

உங்கள் அருகிலுள்ள எமது வங்கியின் கிளைககு விரைவிலேயே வருகை தந்து, முழு விவரங்களையும் பெற்றுப் பயனடையுஙகள.



**கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்**

பதிவு & மததிய அலுவலகம்:
கரூர-639 001

அன்னியச செலாவணியில்
வர்த்தகம் புரிய
அங்கீகாரம பெற்றவர்கள்

சேர்மன்: G வெங்கடேசம்

CO. M83. 9 Tm


அனைவருக்கும் எமது தமிழ்ப் புத்தாண்டு தின நல் வாழ்த்துக்கள்
வாயில், நைலெக்ஸ், நைலான் 644
ஷிபான், ஜார்ஜெட், பாலியெஸ்டர்,
பட்டு மற்றும்
வியப்பூட்டும்
பேரெழில் சேலைகளுக்கும்
இன்றே
விவியின் பிரத்யேக
புடவை பிரிவிற்கு
விஜயம் செய்யுங்கள்
பேஸ்மெண்ட்
ஷோரூம்
(ஏர்-கண்டிஷண்ட்)
வெங்கடேஷ் வஸ்த்ராலயா
பி. லிமிடெட்
ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர் பில்டிங்
ஹைகோர்ட் எதிரில்
சென்னை-600 001 போன் 20201/2

பட்டை- 36 ஊசி 7

ஏப்ரல் — 1988

# மாமழையே வாராயோ?

உள்ளன்புடன் யார் என்னை பக்தி குறையாமல் நேசிக்கிறார்களோ அவர்களிடம் நான் கட்டுப்படுகிறேன். போலி பக்தியால் என்னை கவர முடியாது. —கீதையில் பகவான்.

மழையே வா! வா!! என்று சமுத்திரத்தில் நின்றுப் பாடிப் படம் பிடித்து பத்திரிகையில் விளம்பரப்படுத்தினால் மழை வந்துவிடுமா?

தர்மம் குறைந்து விட்டது, சத்தியம் செத்துவிட்டது, பக்தி போலி பக்தியாய் நாடகமாடுகிறது இந்த நிலையில் நாடு சென்றால் ராம ராஜ்யமாயிருந்தால் என்ன? ராவண ராஜ்யமாயிருந்தால் என்ன?

வானம் பொழியுமா? நாடு செழித்திடுமா?

எங்கும், எதிலும் சுயநலம். அதர்ம வழியில் எப்படியும் வாழ வேண்டும் என்ற குறுக்கு வழியில் செல்லும் சூழ்நிலையில்தான் இன்றைய அரசியல்வாதிகள் நடித்து வருகிறார்கள்.

கடமை, கண்ணியம் என்பதெல்லாம் எங்கே? என்று கேட்கும் அளவிற்கு கட்டுப்பாடாய் செயல்படுகிறார்கள்.

மக்களைப் பற்றிய நினைவெங்கே இவர்களுக்கு ஏற்படப் போகிறது?

குறிப்பாக நம் தமிழகத்தில் மட்டும் ஏன் தொடர்ந்து இயற்கை சதி செய்யவேண்டும?

ஆயிரமாயிரம் கும்பாபிஷேகங்கள் நடந்தால் மட்டும் போதுமா? அறத்தை காக்கும் பதவியில் உள்ளவர்களுக்கு தெய்வபக்தி இல்லையே?

தெய்வ வழிபாடு போன்ற சமய சம்பந்தப்பட்ட விழாவில் கலந்து கொண்டு படம் எடுத்து விளம்பரப்படுத்திக்கொண்டால் பக்தி வந்து விட்டதாய் நினைக்க முடியுமா?

நல்லோர் ஒருவர் இருந்தால் அவருக்காக மழை பெய்யும் என்பார்கள். ஒருவர்கூட இல்லையா?

உண்மையான பக்தியுடன் தெய்வத்திடம் நம்பிக்கை வைத்து செயல்பட்டால் பூமாதேவி நமக்கு எல்லாவித நன்மைகளையும் நிச்சயம் அளிப்பாள்.

தண்ணீர், தண்ணீர் என்று ஊர் ஊராக அலைய வேண்டாமல்லவா!

ஆண்டவனே! இன்றைய வரண்ட சூழ்நிலையில் நீதான் மக்களைக் காப்பாற்ற வேண்டும்.

கருணை உள்ளம்கொண்ட தயாநிதியே! மனமிரங்கு, மாமழையாய் வா என உள்ளன்புடன் வணங்கி போற்றிப் பணிவோம்



**காஞ்சி காமகோடி பரமாச்சார்யாள் அருளியது**

# முதற் கடமை


தர்மத்தையும், பக்தியையும் வளர்ப்பதற்காக நம் நாட்டில் முக்கியமாக, தென்னாட்டில் பல ஸ்தாபனங்கள் இருக்கின்றன. எல்லோரும் அவரவர்களுக்கு முடிந்தவரையில், அவரவர்களுடைய சமயக்கொள்கைகளுக்கேற்ப தர்மப் பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆனால் இந்த விஷயத்தில் நாம் எல்லோருமே இணைந்து செயல்படுவது நல்லது. தனித் தனியாக நின்றுவிடாமல், அப்படி நின்றுவிட்டால் நெல்லிக்காய் மூட்டைபோல ஆகிவிடக் கூடும். இது சாதாரணமாக நாம் சொல்லிக் கொள்ளும் உதாரணம். நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்து விட்டதும் ஒவ்வொரு நெல்லிக்காயும் உருண்டு சிதறி ஒவ்வொரு பக்கத்துக்கு ஓடிவிடும். அவைகளை ஒன்றாக இணைக்கும் சக்தி அங்கே இல்லை. தர்மபிரசாரம் விஷயத்தில் நாம் அப்படி இருக்கக் கூடாது.

நமது நாட்டில் பல மதங்கள் ஒரே சமயத்தில் பழக்கத்திலிருந்த போதிலும், எல்லா மதத்தினர்களும் நான்கு வேதங்களைப் பற்றியும், ஆறு சாஸ்திரங்களைப் பற்றியும் பேசிக் கொண்டே தானிருக்கின்றனர். இவற்றை ஆதாரமாகக் கொண்டே தான் பல்வேறு மார்க்கங்கள் கட்டுக் கோப்புகள் போல் எழுதப் பட்டிருக்கின்றன. ஒரு மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் இதர மதத்தை பின்பற்றுகிறவர்களைப் பற்றிக்குறை கூறிக்கொண்டே இருக்கலாம். அப்படியிருந்தும், இந்தப் பல்வேறு மதங்களை ஸ்தாபித்த ஆசாரியர்களைப் பற்றிப்பக்தியுடன் மரியாதையாகவேதான் பேசுவார்கள்.

இதிலிருந்து ஒருவிஷயம் தெளிவாகத் தெரிகிறது. வெவ்வேறு சித்தாந்தங்கள் ஏற்பட்டுப் பிரசாரத்திலிருப்பது ஒருவருக்கொருவர் கட்சி செய்து கொண்டு பரிந்து நின்று சண்டை போட்டுக்கொண்டு வாழ்வதற்காக அல்ல. அவரவர்களுடைய மனோ பரிபாகத்துக்கும் ருசிக்கும் ஏற்றவாறு அவரவர்களுக்கு உகந்த மார்க்கங்களை ஏற்படுத்தி வழிகாட்டுவதற்காகவே அவைகள் அமைந்தவை. அடிப்படையான தத்துவங்களை எந்த சித்தாந்தமும் புறக்கணிப்பதில்லை என்பதைக் கவனித்தல்வேண்டும்.

இவையனைத்தும் ஹிந்து மதக் கொள்கைகளின் அடிப்படையில் ஒற்றுமையும் ஒருமைப்பாடுள்ள கருத்துக்களும் ஊடுருவிச் செல்கின்றன. என்பதைத்தான் காட்டுகின்றன. ஹிந்து தர்மத்தை அழியாமல் பாதுகாப்பதற்காக ஒரு மார்க்கத்துக்குப் பதிலாகப் பல்வேறு மார்க்

தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் எமது அன்பு வாழ்த்துக்கள்



சங்கள் பல ஆசார்ய புருஷர்களால் வகுக்கப்பட்டன. இவற்றுள் ஏதாவது ஒன்று க்ஷீணமடைந்து நசித்து விட்டாலும்கூட,மற்றொரு மார்க்கம் தர்மத்தை அழிவுறாமல் பாதுகாக்கும். இதுதான் அவற்றின்நோக்கம்.

நமதுமதமாகிய விருக்ஷத்துக்குத் தர்மம்தான் வேர். பக்தியும், ஞானமும் அம்மரத்தின் புஷ்பமும், பழமும் வேர் உலர்ந்து நசித்துப்போகாமல் பார்த்துக் கொள்வது நம் எல்லோருடைய கடமை. தர்மத்தைப் பாதுகாப்பதில் எல்லா மதத்தினர்களுக்கும் பொறுப்புண்டு. எல்லா மதங்களுக்கும் பொதுவானதும், எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டதுமான அம்சங்களை ஆதாரமாகக்கொண்டு எல்லா மதத்தினர்களும் ஒன்றுபட்டுச் செயல்படுவது நன்மை பயக்கும். அவ்வாறு செயல்படவேண்டும் சிற்சில அம்சங்களில் விட்டுக் கொடுக்கவேண்டியுமிருக்கும்.

நமது தக்ஷிண பிராந்தியத்தில் நான்கு முக்கிய சித்தாந்தங்கள் பிரசாரத்தில் இருக்கின்றன. அத்வைதம். த்வைதம், விசிஷ்டாத்வைதம், சைவ சித்தாந்தம் நான்கும் நம்மிடையே இருக்கின்றன. இவைகளின் தலைவர்கள் எல்லோரும் தர்மத்தை வளர்ப்பதற்காக வேண்டி ஒன்றுகச் சேர்ந்தால், தீவிரமாக வேலை செய்ய வாய்ப்பு கிடைக்கலாம். தர்மத்தை பரப்ப நான்கு மதங்களைச்சார்ந்த மடாதிபதிகளைக் கொண்டு பல பிரசுரங்கள் வெளியிடமுடியும். ஏற்கனவே ஹிந்து தர்ம பிரசார சபை ஒன்று சென்னையில் செயல் புரிந்து வருகிறது. இதையே பயன்படுத்திக் கொண்டால் பிரசாரத்தை விஸ்தரிக்க வாய்ப்பு கிடைக்கும். இது ஒரு உதாரணம். நாம் செய்யவேண்டிய முதலாவது, முக்கிய கடமை ஜனங்களிடையே தர்மத்தையும், பக்தியையும் வளர்ப்பதுதான். தர்மத்திலேயே பக்திவேருன்றி இருக்கிறது. தர்மம் நிலைத்து விட்டால் பக்தி தானுகவே நிலைபெற்று நின்றுவிடும்

ஆகவே நாம் எல்லோரும் சேர்ந்துதர்மத்தை வளர்ப்போமாக!

---

ஒவ்வொரு தொட்டிலும் எங்கேயிருந்து வருகிறது என்று கேட்கிறது
ஒவ்வொரு சவப்பெட்டியும் எங்கே போகிருய்? என்கிறது —இங்கர்சால்

---


பக்திச் சுவை! பைந்தமிழ்ச் சுவை!

எத்திக்கும் புகழ் மணக்கும் தெய்வீக மாத இதழ்

# தேவி கருமாரி அம்மன் விஜயம்

ஆசிரியர் : அருட்கவியரசு – ஸ்ரீதேவி கருமாரிதாசர்

தனிப் பிரதி விலை ரூ. 2

ஆண்டுச் சந்தா ரூ. 24 ஆயுள் சந்தா ரூ 251

சூபர் பவர் பப்ளிகேஷன்ஸ்

152, முதல் மாடி — தம்புச் செட்டித் தெரு,
சென்னை - 600 001. போன் : 31595

அட்டைப் படம்

# தாந்தோன்றி மலை கல்யாண வெங்கடரமண சுவாமி

இப் புனித மலை கரூரிலிருந்து நான்கு கிலோ மீட்டர் தொலைவில் திண்டுக்கல் நெடுஞ்சாலையில் உள்ளது. பெருமாள் சுயம்பு மூர்த்தி.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சேர பெருமன்னர்களால் நிர்மாணிக்கப்பட்டு, பிறகு மதுரை நாயக்க மன்னர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளதாக வரலாறு சொல்லுகிறது.

திருக்கோயில் அமைந்திருக்கும் குன்றானது கீழ்மேல் திசையில் நீளமாகவும், கீழ்புறத்தை விட மேல் புறம் உயரமாகவும் உள்ளது. மலையின்மேல் புரத்தில் ஒரு குகை குடையப்பட்டு குகையில் கீழ்பாகத்தில் பாறையோடு ஒட்டின மாதிரி சுயம்பு மூர்த்தியான ஸ்ரீகல்யாண வெங்கடரமண சுவாமி பக்தர்களுக்கு அருள் பாலித்து ஆட்சி புரிந்து வருகிறார். ஆஜானுபாகுவான திருஉருவம். அதோ பட்டாச்சாரியார் தீபாராதனை காண்பிக்கிறார். நன்றாகச்சேவித்துக்கொள்ளுங்கள்.

திருப்பதி வெங்கடேச பெருமாள் மாதிரியே ஹஸ்தங்கள், சங்கு, சகரம் திருக்கை போன்ற அமைப்புகள் பார்க்க பரவசமடைய செய்கிறதல்லவா?

இவ்விதம் அட்டையில் பெருமானை பார்த்துக்கொள்ளுங்கள்.

இத்திருமலையில் இப்பெருமாள் எப்படி வந்தார்? ஏன் வந்தார்? யாருக்காக வந்தார்? உங்களுக்கு தெரியவேண்டாமா?

இத்திருக்கோயிலின் செயல் அலுவலர் திரு. பொ. ராமச்சந்திரன் அவர்கள் சொல்வதைக் கேழ்ப்போம்.

திருப்பதி திருக்கோயிலில் நடைபெறும் திருவிழாக்கள் மாதிரியே தான் இங்கும் நடைபெறுகிறது. புரட்டாசி பெருந் திருவிழா முக்கியமான பெருவிழா. தென் திருப்பதி எனப்போற்றப்பட்டு வருகிறது இப் புனிததலம் ஸ்வயம் வியக்தகிரி என்று வடமொழியில் சொல்லப்படுகிறது. தானாக ஒருபக்தனுக்காக காட்சி கொடுத்தமையால் தாந்தோன்றி பெருமாள் என்றே பக்தர்கள் கொண்டாடுகிறார்கள்.

ஸ்ரீமான் வெ. சுப்பருயாசாரியார் அவர்களால் சுமார் எழுபது வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட தல வரலாறிலிருந்து தொகுத்து எழுதியுள்ளேன் படியுங்கள்.

சோமசர்மன் என்ற பக்தன் வைகுண்ட நாயகனை நாராயணனை விசேஷமாக பூஜித்து, தன் மனைவியோடு சதாகாலமும் தியானித்து வந்தான் ஒரு நாள் அவர் முன் நாரதமகரிஷி தோன்றி, நீங்கள் திருப்பதி வெங்கடரமண சுவாமியை தரிசித்து வரயாத்திரை புறப்படுங்கள். பகவான் உங்களுக்கு நிச்சயம் அருள்புரிவான் என்று சொல்லி மறைந்தார்.

அதன்படி வெங்கடேச பெருமானுக்கு பூஜை செய்து தம்பதிகளாக யாத்திரை புறப்பட்டனர். அது சமயம்மறுபடி நாரதர் அவர்கள் முன் தோன்றி, நீங்கள் கொஞ்ச தூரம் சென்றவுடன் உங்களுக்கு முன் சில கல்தச்சர்கள் தோன்றி ஒருபர்வதத்திற்கு அழைத்துச் செல்வார்கள்,

அவர்களுக்கு உபதேசம் செய்து மலையில் கல்லைப்பிளக்கச்செய்யுங்கள் அதுசமயம் உமக்கு நிச்சயம் எம் பெருமான் திருவருள்கிட்டும் என்று சொல்லிப் போய்விட்டார்.

மறுதினம் தன் பத்தினியுடன் மலை ஏறுவதற்கு உண்டான மங்கல சடங்குகளைச் செய்து முடித்து கல் தச்சர்களுடன் மலை ஏறிபோகும் சமயம்,மலையின் மத்தியிலிருந்து ஓர் வெளிச்சம் தோன்றியது. மலையின் எந்த பாகத்திலும் ஒரு சிறிய துவாரம் கூட இல்லை. அவ்வொளி அவர்கள் மேல்பட்டவுடன் பரம ஆனந்தம் அடைகிருர்கள்.

அமிர்தபானம் செய்த மாதிரி அவ்வளவுகுளுமையாய் இருந்தது.

எந்த இடத்திலிருந்து ஒளி வந்ததோ அங்கு பாறையை பிளக்கும்படி கல்தச்சர்களுக்கு உத்தரவிட்டார் பக்தர் சோமசர்மன். அது சமயம் நாரதமகரிஷியும் அங்கு வந்து சேர்ந்தார். தாமதிக்காமல் கல்தச்சர்களை வேலை செய்யும்படி கட்டளையிட,சிலநொடியில்கோடிசூர்யர்கள் ஒரே சமயத்தில் உதித்தமாதிரி தங்கள் மேல் பாய்வதைப்போல் ஆச்சர்யத்தால் மெய்சிலிர்த்து பரவரமாகி பொம்மை மாதிரி நின்று விட்டார்கள்.

அதுசமயம், வானவெளியில் தேவதுந்துபி வாத்யம் முழங்க, தேவகணங்கள் பாரிஜாத மலர்களை வர்ஷிக்க ஆரம்பித்தார்கள். நாரதர் உள்பட எல்லோரும் பகவானைத் துதிசெய்ய ஆரம்பித்தார்கள். எம் பெருமானின் திருஒளிபட்ட மாத்திரத்தில் அங்கிருந்தவர்கள் அனைவரும் ஞானக்கண் பெற்றவர்களாகி அவ்வொளியின் மத்தியில் வஜ்ரம், வைரம் முதலான நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட கிரீடத்தைத் தலையில்தாங்கி,புன்சிரிப்பால் அழகிய முகத்தோடு சங்கு-சக்கர கதா பத்மங்களை நான்குகைகளிலும் தரித்துக்கொண்டு மார்பில் கௌஸ்துபம், ஸ்ரீவத்ஸம் முதலிய சின்னங்களோடு வனமாலையை கழுத்தி லணிந்து பீதாம்பரதாரியாக, பார்ப்பவர் மோகிக்கும் திவ்யகாந்தியோடு வைகுண்டபதியான வெங்கடேசப் பெருமாளைக் கண்டார்கள்.

பக்தன் தன் பத்தினியோடு மற்றுமுள்ளவர்களும் சாஷ்டாங்கமாக எப்பெருமான் திருவடியில் விழுந்து வணங்கினர்கள்.

நாரத மகரிஷியால் சங்கல்பிக்கப்பட்ட வெங்கடகிரி யாத்திரை பக்தனுக்கு எளிதாய் முடிவடைந்து வெங்கடேசப் பெருமானின் திவ்ய தரிசனமும் கிடைத்துவிட்டது.

உம்மை அனுக்ரஹிப்பதற்காக, நானுகவே தோன்றியதால் 'இப்பர்வதம் இன்றுமுதல் தாந்தோன்றி மலை என பிரசித்தி பெற்றதாகிவிடும். திருப்பதிமலையிலும் இங்கும் எனக்கு ஒரே மாதிரியான பிரீதி. இங்கே என்னை சேவிப்பவர்களுக்கு சகலவிதமான இஷ்டங்களும் பூர்த்தியாகும். நான் எப்பொழுதும் இங்கு சன்னிதானம் கொண்டிருக்கிறேன் என்று பக்தனைப் பார்த்து கடாக்ஷித்தார்.

இப்புனித தான்தோன்றிமலையின் வரலாற்றையும், வெங்கடரமணப் பெருமானையும் சேவித்து படிப்பவர்களுக்கு ஏழுமலையானின் பூரண அருள் ஏற்பட்டு சகல சௌபாக்யங்களும் உண்டாகும் என்றுநாரத மகரிஷியின் திருவாக்காகச் சொல்லப்படுகிறது.

—குண்டுசி ராதாகிருஷ்ணன்.

---

ஒரு பெண்ணின் புன்னகை அழகாகத்தானிருக்கிறது. ஆனுல், அவள் வெட்கப்படும்போதுதான் மிகவும் அழகாக இருக்கிருள். —காண்டேகர்.



"தலைமுறை தலைமுறையாக
மக்கள் பயன்படுத்திவரும்
இந்திய மருந்துகளின்
சக்தியே தனி...

அவற்றுள்
தனிச்சிறப்பு வாய்ந்தது
அமிர்தாஞ்சன்."

தலைமுறை தலைமுறையாக மக்கள் நம்பிக்கையோடு பயன்படுத்திவரும் அமிர்தாஞ்சன் பத்து மருந்துப் பொருள்கள் அடங்கியது. இவை பத்தும் இயற்கையின் அற்புதமான சக்தி வாய்ந்த மருந்துகள். அதனால் தான் அமிர்தாஞ்சன் ஒரு சக்திமிக்க வலி நிவாரணியாக விளங்குகிறது.

இதன் பயனாக தலைவலி, ஜலதோஷம், உடல்வலி, சுளுக்கு இவை எல்லாவற்றுக்குமே அமிர்தாஞ்சன் விரைவாக, நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. அமிர்தாஞ்சன் உபயோகிப்பதால் ஆபத்து இல்லை. இதனால் வேறு தீய விளைவுகள் எதுவும் ஏற்படாது.

**அமிர்தாஞ்சன் — 80 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல குடும்பங்களில் பயன்பட்டுவரும் நம்பகமான மருந்து.**

# அமிர்தாஞ்சன்

**தலைவலி, ஜலதோஷம், உடல்வலி, சுளுக்கு — அனைத்தையும் போக்க அருமையான மருந்து.**



AM 2148



# வ்யாஸ பாகவதம்

கவிஸேரி சுப்பிரமணிய சாஸ்திரிகள்

## 86

பிரத்யும்னர் சம்பரனிடம்சென்று யுத்தத்திற்கு கூவியழைத்தார். அவனிடம் கோபம் ஏற்படவேண்டிய வார்த்தைகளை பிரயோகித்தார். அவனும் வெகுண்டு சிவந்த கண்கள் கொண்டவனாய் காலால் மிதிபட்ட சர்ப்பம்போல் கதாயுதத்தைக் கையிலேந்தி வெளிப்பட்டான். கதையைச் சுழற்றி பிரத்யும்னனை நோக்கி அடித்தான். அவரும் தமது கதையை சம்பரன் மேல் மீது அடித்தார். மயனுடைய மாய பலத்தால் சம்பரன் அவர் மீது ஆகாசத்தில் நின்று பல அஸ்திரங்களை விட்டான். மாயையை மாயையால் தடுத்து நிறுத்தினான். பிரத்யும்னன். சம்பரனின் மாயை அவரிடம் பலிக்கவில்லை. முடிவில் பிரத்யும்னர் கூர்மிக்க வாளைக் கொண்டு அரக்கனின் தலையை வெட்டித் தள்ளினார்.

மாயாவதிக்கு ஆகாயத்தில் சஞ்சரிக்கும் திறனுண்டு. ஆகவே தனது கணவனான பிரத்யும்னருடன் வான வழியே விரைந்து துவாரகையை அடைந்தாள். ஸ்ரீ கிருஷ்ணரின் அரண்மனைக்குள் சென்ற அவர்களைக் கண்ட ஸ்திரீகள், பிரத்யும்னன் ஸ்ரீகிருஷ்ணனென்று மறைந்து நின்றனர். பிறகு பிரத்யும்னன் ஸ்ரீகிருஷ்ணரிடமிருந்து சில வேறுபாடுகள் இருப்பதுகண்டு அவர்களை அணுகினர். ருக்மிணியும் அங்கே வந்தாள். தன் மகன் இருந்தால் இவ்வாறே யிருப்பான் என்று எண்ணினாள். இவ்வழகன் யாரா யிருக்கக்கூடும் என சிந்தித்தாள். அந்தவேளையில் ஒன்றுமறியாதவர் போன்று ஸ்ரீகிருஷ்ணன் தம் தாய் தந்தையருடன் அங்கு வந்தார். அப்போது அங்கு வந்த நாரத முனிவர் குழந்தையை சம்பாசுரன் கொண்டு சென்றது முதல் இது வரை நடந்த விருத்தாந்தங்களை அனைவருக்கும் கூறி காணாமற் போன பிரத்யும்னனே இப்போது வந்துள்ள ஆணழகன் என்பதை எடுத்துரைத்தார். எல்லோரும் பிரத்யும்னனைக் கண்டு களித்தனர்.

பிரத்யும்னனும், மாயவதியும் துவாரகையில் மகிழ்வோடு வாழலாயினர்.

துவாரகையில் சத்ராஜித் என்றோர் யாதவன் இருந்தான். அவன் சூரியனை ¦பக்தியோடு வெகுகாலம் உபாஸித்தான். அவனது பக்தியை மெச்சி சூரியன் அவனுக்கு சியமந்தகம் என்ற மணியை பரிசாகக் கொடுத்தான். அந்த மணியை கழுத்தில் தரித்தவனாய் சத்ராஜித் துவாரகையின் வீதிகளில் வந்தானாகில் சூரியனே வந்ததுபோல் பிரகாசத்தை உண்டு பண்ணக் கண்டு அனைவரும் வியந்தனர். அந்த சத்ராஜித் ஒருகால் தான் தவறுக்காக சியமந்தகமணியையும்

"YOU
CAN
TRUST
TVS"

We're not saying it
our customers are.-

Ask the Government Departments —
both Central and State — and
Public Sector undertakings
who come to us.

Ask truck operators in Andhra Pradesh,
Karnataka, Kerala & Tamilnadu.

Ask the car owners why they prefer TVS

You'll find they all say:
You can trust TVS.

YOU CAN TRUST TVS

T V Sundram Iyengar & Sons Ltd.
Madurai and Branches

தனது பெண்ணான சத்யபாமையையும் கொடுத்தார் என்று சுகர் கூற பரீக்ஷித் அந்த விவரங்களை முறையே கேட்க, அதற்கு சுகர் அரசனை நோக்கி, ஒருகால் கிருஷ்ணர் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருக்கையில் அப்போது அவரைக் காண வந்த சத்ராஜித்தை சூரியன் உம்மை தரிசிக்க வருகிறார் என்றனர்.

அப்போது ஸ்ரீகிருஷ்ணர் உண்மையை அறிந்து புன்னகைசெய்து வருபவன் சூரியனல்ல, மணி அணிந்துவரும் சத்ராஜித் என்றார்.

பிறகு சத்ராஜித் தமது கிருஹம் சென்று பூஜை முதலியன செய்து அந்த ரத்தினத்தை பூஜாக்கிருஹத்தில் ஸ்தாபித்தார். தினமும் எட்டாயிரம் பொன்னை உற்பத்தி செய்யும் சக்தியுடையது. அது இருக்கும் இடத்தில் வறுமையும் தீமையும் அணுகாது. மாயாவிகள் அங்கு வரமாட்டார்கள். ஒரு சமயம் ஸ்ரீகிருஷ்ணர் சத்ராஜித்திடம் வந்து அந்த ரத்தினத்தை உக்ரஸேனராகிய அரசருக்குக் கொடுக்கும்படி கூறினார். அதற்கு ஒப்பவில்லை சத்ராஜித். சத்ராஜித் பணத்தாசையால் ஸ்ரீகிருஷ்ணருடையவார்த்தைகளை ஏற்கவில்லை.

சில காலத்திற்கு பிறகு ஒரு நாள் சத்ராஜித்தின் இளைய சகோதரன் ப்ரஸேனன் தனது கழுத்தில் சியமந்தகமணியை அணிந்து கொண்டு வேட்டைக்குக் காட்டுக்குச் சென்றான். அங்கு ஒரு சிங்கம் அவனையும் அவனது குதிரையையும் அடித்துக்கொன்றது. மணியைக் கண்ட சிங்கம் அதனை எடுத்து ஒரு குகைக்குள் சென்றது. அந்த குகையின் ஜாம்பவான் வசித்து வந்தார் அங்கே நுழைந்த சிங்கத்தைக் கொன்று அந்த மணியைத் தனது குழந்தைக்கு விளையாடக் கொடுத்தார்.

வேட்டைக்குச் சென்ற பிரஸேனன் திரும்பாததால் சத்ராஜித்துயருற்றான். மணிவேண்டுமென கிருஷ்ணர் கேட்டதால் அதைக் கவர ஸ்ரீகிருஷ்ணனே தனது சகோதரனையும் கொன்றதாக பழியும் சுமத்தினான் அவன் இந்த அபவாதத்தை ஊரெல்லாம் பரப்பினான்சத்ராஜித். ஸ்ரீகிருஷ்ணர் இதனைக் கேள்வியுற்றார். பலர் பின்தொடர காட்டுக்குச் சென்றார்அவர் பிரஸேனனைத்தேடி. அங்கு எல்லோரும் இறந்துகிடந்த குதிரையையும் பிரஸேனனையும் கண்டனர். பிறகு சிங்கம் இறந்து கிடப்பதையும் பார்த்தனர். தன்னுடன் வந்திருந்தவர்களை வெளியே நிறுத்திவிட்டு ஜாம்பவான் வசித்து வந்த குகையினுள் சென்றார். குகையை அடைந்த அவர் ஜாம்பவானின் மைந்தன் மணியை வைத்துக்கொண்டு விளையாடுவதைக் கண்டார்.

ஸ்ரீகிருஷ்ணர் அவனை அணுகியதும் அவனுடைய தாய் மிகவும் கூக்குரலிட்டாள் அதனைக் கேட்ட ஜாம்பவான் மிகுந்த கோபத்துடன் ஓடிவந்தார். பின்னும் வந்திருப்பது யாரென அறியாது யுத்தம் செய்ய முற்பட்டார். இருபருத்துகள் போல அவர்களிருவரும் இருபத்தெட்டு நாட்கள் போர்புரிந்தனர். போரில் இருவரும் சளைக்கவில்லை முடிவில் ஜாம்பவான் உடல் சோர்ந்து நின்றார். பலம் குன்றிய அவர் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனார்.

தன்னுடன் இவ்வாறு யுத்தம் புரிந்தவர் யாராக இருக்கக்கூடுமென்பதறியாது பின் ஸ்ரீகிருஷ்ணக் கடவுள் என அறிந்து பலவாறு துதித்தார். யமனையே வதைக்கும் வைகுண்டநாதனுடன் தாம் போர் செய்ய இயலாதென்பதைதெளிந்து ஸ்ரீகிருஷ்ணனை பலவாறு துதித்தார்.

(தொடரும்)

அனைவருக்கும் எங்களது தமிழ் புத்தாண்டு தின வாழ்த்துக்கள்

## தோன்றிவிட்டால் போதுமா!

காக்கையும் குயிலும் ஒரே கூட்டிலே பிறந்தாலும்




காக்கைதான் பாடிடுமா?

வேம்பும் கரும்பும் ஒரே மண்ணிலே வளர்ந்தாலும்



வேம்புதான் இனித்திடுமா?

நத்தையும் முத்தும் ஒரே நீரிலே தோன்றினாலும்



நத்தைதான் ஜொலித்திடுமா?

சகல பொடிகளும் பட்டணத்திலே தயாரானாலும்




'ரத்தினம்' பொடியைப்போல்

கவர்ந்திடுமா, மணந்திடுமா, ஜொலித்திடுமா

# T·A·S·ரத்தினம்

## பட்டணம் பொடி

தபால் பெட்டி 1151 சென்னை-21

S.R. ஞானம் பட்டணம் பொடியும் எமது தயாரிப்பே



# மந்த்ராலய மகானை தரிசியுங்கள்

## 32

ஸ்ரீராகவேந்திரர் பக்தர்களின் மனோபீஷ்டங்களையெல்லாம் கல்ப விருக்ஷம்போல் நிறைவேற்றித் தருபவர். சந்தானம், சம்பத்து பரிசுத்தமான ஹரிபக்தி, விசேஷ ஞான வாக்கு. சரீரவன்மை முதலியவைகளைக் கொடுப்பவர். சரீரத்திலுண்டான எல்லா உபாதைகளையும் போக்கக் கூடியவர். சம்ஸார பயத்தை நீக்கி ஞானம், பக்தி, ஸத்புத்திரன், ஆயுள், கீர்த்தி, ஐஸ்வர்யம் சுகிருதம் ஆகியவைகளை வளர விடுபவர்.


அறிவில்லாமை, மறதி, விபரீத ஞானம், மேலும் அபஸ்மாரமாகிய வலிப்பு, குஷ்டம், கைகால்களின் ஓய்ச்சல், நடுக்கம்விக்கல்முதலானவைகளால் உண்டாகும் இந்திரிய உபாதைகளைப் போக்கி இகத்தில் சதுர்வித புருஷார்த்தங்களையும் கொடுத்து பரத்தில் மோக்ஷத்தை அளிக்கக் கூடியவர். "ஓம் ஸ்ரீராகவேந்த்ராய நம: என்னும் எட்டு எழுத்து மந்திரத்தை ஜபித்தாலும் மனத்தால் பாவனை செய்தாலும் அவரவர் விரும்பும் பலன்கள் கண்டிப்பாக ஏற்படும்.

அன்வாரி மாதவராவ் என்ற முன்னாள் பார்லிமெண்ட் உறுப்பினர் ஒரு சமயம் ஏதோ காரியமாக அமெரிக்கா சென்றிருந்தார். அவர் நியூயார்க் நகரில் தங்கியிருந்தபோது திடீரென்று மார்பில் வலி ஏற்பட்டு நினைவிழந்தார். நண்பர்கள் அவரை ஒருபிரபலமருத்துவமனையில் சேர்த்தார்கள். அவரைப் பரிசோதித்த வைத்தியநிபுணர்கள் அவர்பிழைக்க மாட்டார் என்றுமுடிவு செய்துவிட்டார்கள்.

இங்ஙனம் கைவிடப்பட்ட நோயாளிகளுக்கென ஒதுக்கப்பட்ட ஐஸ் அறையில் மாதவராவின் உடல் கிடத்தப்பட்டது.நள்ளிரவில் மீண்டும் நினைவுவந்து விழித்துப் பார்த்த அவர் சவங்களுக்கு நடுவே தாம் கிடத்தப்பட்டிருப்பதைக் கண்டுதிகிலடைந்தார் தம்முடைய திக்கற்ற நிலைமையைக் கண்டு அவருக்கு அழுகையே வந்துவிட்டது. மிகவும் துக்கத்துடன் அவர் ஸ்ரீராகவேந்திர சுவாமிகளை நினைத்துக் கொண்டு மனமுருகப் பிரார்த்தனை செய்யலானார்.

திடீரென்று பாதுகைகளின் ஒலி கேட்பதை உணர்ந்த மாதவாராவ் தலை நிமிர்ந்து பார்க்க, ஸ்ரீராகவேந்

பி எஸ். பரமேஸ்வரன், பி.ஏ.,பி.எல்., சென்னை



எமது தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் !

ஒளிமயமான எதிர்காலத்திற்கு சேமிப்பே சிறந்த வழி

*

இன்றே எங்கள் வங்கியின் கிளையொன்றில்
உங்களது சேமிப்புக் கணக்கைத் தொடங்குங்கள்

*

உங்கள் தேவைக்கேற்ற சேமிப்புத் திட்டத்தைத்
தேர்ந்தெடுங்கள்

*

விபரங்கட்கு அணுகுங்கள் :

- "கருணைக் குடில்", 226, கதீட்ரல் சாலை, சென்னை - 600 086
- 13, மாட்லி தெரு, தி நகர், சென்னை - 600 017.
- 180, தம்பு செட்டித் தெரு, சென்னை - 600 001.
- 44, கிழக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை - 600 004.
- பிளாட் நெ. 4035, V-83, IV மெயின் தெரு, அண்ணாநகர், சென்னை - 600 040.
- 209, திவான் பகதூர் ரோடு, R. S. புரம், கோயம்புத்தூர் - 641 002.
- 42, அருணாசல ஆசாரி தெரு, சேலம் - 636 001.
- 1, பேர்ட்ஸ் தெரு, கன்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி - 620 001.
- 73, மேற்கு ஆவணி மூலத் தெரு, மதுரை - 625 001.

# பாரத் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : "ஆக்ஸ்போர்டு ஹவுஸ்"
அண்ணா சாலை, சென்னை - 600 006.

திரரே தமது கட்டிலை நோக்கி வருவதைக் கண்டார், பிறகு ஸ்வாமிகள் அவரது உடலை மூன்று முறை தடவிக் கொடுத்து'', நோய் குணமாகி விடும் கவலைப்பட வேண்டாம்'' என்று அபயம் கூறி மறைந்தார். இரவு மறைந்து மறுநாள் காலைஜஸ் அறையினைத் திறந்து பார்த்த பொழுது மாதவராவ் பூரண ஆரோக்கியத்துடன் உட்கார்ந்து இருப்பதைக் கண்ட அதிகாரிகள் மிகவும் அதிசயம் அடைந்தார்கள். பிறகு அவரை வேறொரு அறையில் கொண்டு போய்ப்படுக்க வைத்தார்கள். இரவு நடந்த இந்த அற்புத நிகழ்ச்சியை, ''தென்னிந்தியமகான் ஸ்ரீராகவேந்திர சுவாமிகளின் அற்புத சிகிச்சை'' என்னும் தலைப்பில் அந்த மருத்துவமனைப் பதிவேட்டில் குறித்து வைத்திருக்கிறார்கள்.

ராமனாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த ராமனாதன் செட்டியார் என்ற கோடீசுவரர் ஒரு சமயம் வயிற்றுக் கோளாறினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவரைப் பரிசோதித்த வைத்திய நிபுணர்கள் அவருக்கு ரணசிகிச்சை செய்ய வேண்டுமென்றும் அப்பொழுதும் அவர் உயிர் பிழைப்பது அரிதென்றும் கூறிவிட்டார்கள்.

இந்த சமயத்தில் ஒரு நண்பர் மூலம் ஸ்ரீராகவேந்லரரின் மகிமையை அறிந்த செட்டியார், தமது வீட்டிலேயே சுவாமிகளின் படத்தைவைத்து சேவை செய்யலானார். செட்டியாரின் பக்தியை மெச்சிய ஸ்ரீராகவேந்திரர் அவரது கனவில் தோன்றி அவரை ரண சிகிச்சை செய்து கொள்ளுமாறு பணித்தார் செட்டியாரும் உடனே வைத்தியர்களிடம் சொல்லி ரண சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார். டாக்டர்கள் செட்டியார் உடலில் பதின்மூன்று முறை ரண சிகிச்சை செய்தார்கள்! செட்டியார் உயிர் பிழைத்தார்! டாக்டர்கள் வியந்தனர். வேண்டியவர்க்கு வேண்டும் வண்ணம் அருள்பாலித்த ஸ்ரீசுவாமிகளின் பெருமையை ஊரே வியந்து கொண்டாடியது.

---

இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொருவன் செய்யும் தவறுகளுக்கும் அவன் வாழ்நாளிலேயே தகுந்த தண்டனை அனுபவித்துவிடுகிறான், யாரை ஏமாற்றினாலும் ஆண்டவனை ஏமாற்றமுடியாதல்லவா? ஆகவே வாழ்க்கையில் இருக்கும் சொற்ப நாட்களிலாவது நல்லவர்களாகவும், மற்றவர்களுபகாகவும் வாழப் பழகு. நற்கதி நிச்சயம் கிடைக்கும். —குகதாசர்.

---

ஆன்மீக எழுத்தாளர் மகேந்திரவாடி உமாசங்கரனின்
உள்ளமுருக்கும் பக்தி நூல்
அம்பிகையின் புகழ்பரப்பும் சக்திநூல்
**'காருண்யவல்லியே காமாட்சி'**
(மாங்காட்டு நாயகியின் தல வரலாறு, வழிபடும் முறை, பாடல்கள் ஸ்ரீ காமாட்சி சுப்ரபாதம், துக்க நிவாரணி அஷ்டகம் போன்றவைகள் அடங்கியது)
தபால் செலவு உள்பட ரூ. 1-50 அனுப்பி
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**ஸ்ரீ காமாட்சி பதிப்பகம்**
27, ராஜாஜி வீதி, ராமகிருஷ்ணாநகர், வளசரவாக்கம், சென்னை-87.

தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் எமது அன்பு வாழ்த்துக்கள்

பண்டிகை நாட்களை
குதூகலத்துடன்
கொண்டாட

# விஜேத்
# கிளாத் சென்டர்



சார்பு நிறுவனம்

72. CROSS-CUT ROAD
GANDHIPURAM
COIMBATORE-12
PH: 30309

801, பெரிய கடை வீதி
கோயமுத்தூர்-641001.
PHONE: 26131.

# பக்தியின் பெருமை

G. N. நாராயணன்

இறைவனுல் படைக்கப் பட்ட எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவராசி களில் பகுத்தறிவுள்ள மனிதனே உயர்ந்தவன் .இந்த மனித பிறவி லேயே அவன் இறைவனை அடைய முயற்சிக்கவேண்டும்.ஆகவேஉலக வாழ்க்கையில் இருந்துக் கொண்டே சில் ஆன்மீக சாதனைகளையும் புரிய வேண்டும். இந்த ஆன்மீக சாதனை களில் இக்கலியுகத்திற்கு மிகவும் உகந்தது பக்தி ஒன்றே.

பல விதமான வர்ணங்கள், பூக் கள், இனிப்பு வகைகள் இருந்த போதிலும் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிபபிட்ட வர்ணமோ, பூவோ, இனிப்பு வகையோ பிடித்திருப்பது போல் நவவித பக்தியில் தனக்குப் பிடித்த ஏதோ ஒரு வித பக்தியை மனிதன் கையாளலாம்.

பொதுவாகபக்தி என்பது இனி மையான தன்மையுடையது. உள் ளத்திற்கு ஆறுதல் தரக் கூடியது. பொறுமையையும், மனவுறுதியை யும், வலிமையையும் அளிக்க வல் லது பக்தி. அன்பையும், பண்பை யும் வளர்ப்பது பக்தியே.பிரேமையி லிருந்து பிறப்பதுதான் பக்தி.

பக்தியுடையவன் கோழையல்ல. பக்தி என்பது வலிமைக்கு, அறி வுடைமைக்கு, பகுத்தறிவுக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. சுகத்தையும், சாந்தியையும், ஆனந் தத்தையும் அளிப்பது பக்தியே. தர்ம மார்க்கத்திலிருந்து பிறழாமல் நடப்பவன் எவனே, சத்திய நெறி யில் ஒழுகி,பிறரின் மகிழ்ச்சியையும் துக்கத்தையும், தன்னுடையதாகப் பாவிப்பவன் எவனே, அவனே சிறந்த பக்தனுவான்.

பக்தி என்பது சேவை உணர் வைத் தூண்டவேண்டும்.அதையே இறைவன் மனிதரிடம் வேண்டு கின்றன். பக்தனுக மாறுவது என் பது எளிய செயலல்ல. ஞானத் தைப் பெறுவது எளிய செயல். பக் தியைப் பெறுவது மிகவும் சிரம மான காரியமாகும்.

தளராத மனவுறுதியும், முழுமை யான சரணுகதியுமே பக்தியின் இயல்புகளாகும். பலனை எதிர்ப் பாராது பகவானை வழிபடுபவனே உண்மையான பக்தனுவான்.

ஒருவர் எத்தனை கோவில்கள் கட் டினுர், எவ்வளவு நன்கொடைகள் அளித்தார், எத்தனை முறைகள் இறைவன் நாமத்தை எழுதினுர். என்பதை வைத்துக்கொண்டு அவ ருடைய பக்தியை அளவிட முடி யாது.

பலனை எதிர்ப்பாராத, ஆசையின் நிழலால் மாசு படாத அன்புப் பெருக்கே பக்தி என்பதாகும். பரி சுத்தமான உள்ளத்திலிருந்து பிரவ கிக்கும் அன்பு வெள்ளமே பக்தியா கும்.

பக்தியே ஞானத்தைத் தேடித் தரும் சமநோக்கை அளிப்பதும், அங்காரத்தை ஒழிப்பதும் பக்தியே, பக்தி இதயத்தைத் தூய்மையாக்கு கிறது. பரந்த நோக்கத்திலும், உயர்ந்த லட்சியங்களிலும் பற்றுக் கொள்ளச் செய்கிறது பக்தி, இறை வனின் அருளையும் அது பெற்றுத் தருகிறது. இறைவனை அவருடைய இருப்பிடத்திலிருந்து தன்னிடம் இழுக்கும் சக்தி பக்திக்கு உண்டு.

''நான்-எனது'' என்ற அகங்கார, மமகாரத்தை ஒழித்து,விடாமுயற்சி யோடு ஆத்மீக வழியில் முன்னேறி ஞல் இறைவனை அடைவது உறுதி, அந்த உறுதியை அளிப்பதும் பக்தியேயாகும்.

பக்தியை உபாசனை என்னும் கூறுவார்கள் அதாவது, இறைவனுக்கு அருகில் வாசம் செய்வது, இறைவனின் சாந்நித்தியத்தை உணர்ந்து அதன் இனிமையில் மெய்மறந்திருத்தல் என்பது பொருள். இறைவனை நெருங்க வேண்டும் என்ற உணர்வே பக்தனைத் தீர்த்த யாத்திரைச் செல்லவும், கோவில்களை எழுப்பவும் தூண்டுகிறது.

பக்தியில் உயர்ந்துள்ளவர்கள் கோபியர்கள், அவர்கள் திரும்பிய திசைகளிலெல்லாம் தங்களுடைய இதயக் கோவிலில் வாசம் செய்த இறைவனான கண்ணனையேக் கண்டார்கள் கண்ணனிடம் கோபியர்களும், கோபாலர்களும் கொண்ட பக்தியை விவரிக்க எழுத்துக்களுக்கு சக்தியில்லை என்கிறார் வியாச பகவான். அந்த பக்திக்கே "கோபிகா பக்தி" என்ற தனி சிறப்புப் பெயர் உண்டு.

முழுமையான சரணாகதி மனப்பான்மையும், அசைக்க முடியாத நம்பிக்கையும் உடைய உண்மையான பக்தனைக் காண்பது சிரமமே என்கிறார் பகவான்.

பக்தி என்னும் அரசனுக்கு இரண்டு மெய்க்காப்பாளர்கள் உண்டு. ஞானமும், வைராக்கியமுமே அவைகள் பக்தி என்பது கங்கை நதி என்றால், வைராக்கியம் யமுனை நதி, ஞானம் என்பது சரஸ்வதி நதி, இந்த மூன்றும் சேர்ந்ததே ஆன்மீக திரிவேணி சங்கமம் ஆகும்

பெற்றோர்கள், பெரியோர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரிடமும் பணிவுடன் நடந்துக்கொள்ளத் தூண்டும் நிலையே பக்தியாகும் அது என்னென்றும் நிலைத்து நிற்க வேண்டிய மனநிலையாகும். உடலுக்கு உணவைப்போல் இதயத்திற்குச் சக்தியும், பராமரிப்பும் அளிப்பது பக்தியே.

வெற்றித்தோல்வி, புகழ் நிந்தனை பெறுதல், இழத்தல் ஆகியவை எதுநேர்ந்தாலும் நிதானம் இழக்காத அமைதியே பக்தனின் இயல்பாகும்.

சாதாரணமாக ஒரு சில பக்தர்களிடம் சகுணோபாசனை சிறந்ததா? நிர்க்குணோபாசனை சிறந்ததா? என்ற சந்தேகங்கள் எழுவது உண்டு. ஆரம்ப நிலையில் ஒரு பக்தனுக்கு சகுண உபாசனைதான் எளிதாகும். எவரிடம் தேகாபிமானம் நீங்காமலிருக்கிறதோ அதுவரைதான் நிர்க்குண உபாசனை வெகு கடினமானதாகும். இந்த கலியுகத்திற்கு சகுண உபாசனையே சாலச் சிறந்ததாகும் சிறந்தயோகிகளுக்கும், ஞானிகளுக்கும் அவர்களுடைய கடினமான ஆத்மீக சாதனைகளினால் நிர்குண உபாசனை கை கூடுகின்றன.

கீதையில் பகவான் கூறியது போல், எவனொருவன் எல்லா உயிர்களிடத்தும்பகைமைஇல்லாதவனாகவிருக்கிறானோ, கருணையே உடையவனாய் இருக்கிறானோ, "நான்" "எனது" என்ற அகங்கார மமதை இல்லாதவனோ, இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக கருதுகிறானோ, பொறுமையுடையவனாய் எப்போதும் சந்தோஷமுடையவனாய் உள்ளவனோ, அடங்கின மனத்தினனாய், திடச்சித்தமுடையவனாய், சதா இறைவனிடத்தில தன்னை அர்ப்பணித்து திரிகரண சுத்தத்துடன் சரணாகதி அடைந்தவனாய் இருக்கிறானோ அவனே உண்மையான பக்தன் என கருதப்படுகிறான்.

ஆகவே, இக்கலியுகத்தில் இறைவனை அடைய ஒவ்வொருவரும் நிர்மலமான, உள்ளன்புடன் பக்தி புரிந்து தங்கள் தங்களுடைய வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்றி நற்கதி பெறவேண்டும்.

# கடமையைச் செய்

**சிருங்கேரி சாரதா பீடாதிபதி ஸ்ரீ பரமாச்சாரியார் சுவாமிகள்**

மக்களுக்கு நேரும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் என்ன? இன்பத்தையும் துன்பத்தையும் இறைவன்தான் தருகிருன் என்று கொள்ளலாமா? அப்படியென்ருல் வேண்டியவருக்கு இன்பத்தையும், வேண்டாதவருக்கு துன்பத்தையும் தருகிருன் என்று தானே சொல்லத் தோன்றும்? அது பொருந்துமா? இறைவனே ஸர்வக்ஞன். எல்லாவற்றையும் அறிந்தவன், சாந்த மூர்த்தி, கருணைக்கடல், என்கிருேம். அப்படிப்பட்ட இறைவனுக்கு விருப்பு வெறுப்பு இருக்குமா?

உலகத்திலேயே மக்களின் நல்வாழ்வுக்கென இறைவனின் பிரேரணையின் பேரில் சில நியதிகளை வகுத்திருக்கிருர்கள் நம் முன்னேர்கள். அவற்றின்படி நடப்பதுதான் முறை. அவற்றை நாம் மீறினல் நமக்குமேலுள்ளவர்களுக்குகோபம் வருவது நியாயம்தானே? பெற்ருேர் சொல்கேட்காத ஒருபையன், அவர்கள் கோவிலுக்குப் போ என்ருல் சினிமாவுக்குப் போவான், கண்ட இடங்களில் சுற்றுவான். இம்மாதிரிச் செய்தால் பெற்ருேருக்குத் தம் பையன்மீது அன்பு உண்டாகுமா? கோபம் வருமா? கோபம் வருவது தானே சகஜம்? ஆனல் பையனே "ஐயோ, என்பெற்ருேருக்கு என் மீது வீணுகக்கோபம் வருகிறதே!"

## சுகந்தி - ரமேஷ்பாபு திருமணம்

மாயவரம் பிரபல ஒரிஜினல் தென்னமரக்குடி எண்ணைத் தயாரிப்பாளர் ஆர். எஸ். கிருஷ்ணு அண்ட் கோ., அதிபா, எனது அருமை நண்பர் திரு. வீரராகவலு அவர்களின் அன்புச் செல்வி சௌபாக்யவதி. சுகந்தியின் திருமணம் மாயவரத்தில் ,18—3—83 வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பாக சாஸதிர முறைப்படி நடைபெற்றது. மணமகன, சென்னை, திரு. கிருஷ்ணமூர்த்தி நாயுடு அவாகளின் செல்வமகன சிரஞ்சீவி. டாகடர்.ரமேஷபாபு. நலல பொருத்தமான ஜோடி.

மாயவரம் கலைமாமணிகளான முத்துககுமாரசாமி - வைத்தியனுதன் சகோதரர்களின நாதஸவர இசை மிகவும் சிறப்பாக இருந்தது. அடுத்து காலை ஒனபது மணிககு பித்துக்குளி முருகதாஸ அவாகளின பகதி பாடல்கள இரண்டரை மணி நேரம நலல வெயிலில மண விழாவிறகு வந்திருந்தவர்கள மெய் மறந்து ரசித்தாாகள். பின்னணியில பாடிய திருமதி. முருகதாஸ அவர்களின் இனிய குரலில பாடிய பகதிப பாடலகள முன்னணியில இடம் பெறறன.

மணவிழாவிறகு ஏராளமான உளளூர்-வெளியூர் வியாபார அன்பர்களும் மறறும் சுற்றததாரும வநதிருநது மணமககளை வாழத்திச சென்ருர்கள்.


முருகப் பெருமான் திருவருளை வேண்டி அன்புச செலவங்கள சுகநதி - ரமேஷபாபு அவர்களுககு ஒளிமயமான பொற்கால வாழக்கையை அருளி, ஆயுள ஆரோக்யத்துடன வாழ ஆசிகூறி வாழ்த்துகிறேன். --ஆசிரியர்

எமது மனங்கனிந்த தமிழ்ப் புத்தாண்டு தின நல் வாழ்த்துக்கள்



ஈடில்லா மணம்
இதயம் கவரும் மணம்

ஜன் பூஜா
அகர் பத்திகள்



இதர தயாரிப்புகள்

ஜன் சுகந்த், ஜன் பிரியா
எல்லா கடைகளிலும் கிடைக்கும்

BASIL PRODUCTS
57 'HUNTERS ROAD, MADRAS - 600 112

என்றால் அது எந்த அளவுக்கு நியாயம்?

அதுபோல இறைவனுக்கும் நம் மீது கோபம் வரவேண்டுமானால் அதற்கான காரணங்களை ஆராய வேண்டும் இறைவனின் கோபத்தை நீக்க நாம் முயலவேண்டும். சாத்திரங்களின் விதிமுறைகளை சரிவர நாம் பின்பற்றவேண்டும்

ஜீவன் அநாதிகாலமாகப் (தொடக்கமில்லாததாக) பிறவிகளை எடுத்துக் கொண்டே வருகிறது. இதற்குக் காரணம் கருமம் அல்லது முன்வினை. முன்வினைப் பயனை ஒட்டித்தான் தற்போது நம் வாழ்க்கை அமைந்திருக்கிறது. இந்த வினைப்பயனை நாம்விட நினைத்தாலும் அது நம்மை விடாது. நாம் இந்த உடலைவிட்டாலும் மறுபிறவியிலும் அது தொடரும். கர்மாவின் வலிமையைக் காட்டத்தான் இறைவன் அவதாரங்களில் பலலீலைகளைப் புரிகிறான் ராமன் கடவுள் அவதாரம். அவனுக்கும் வனவாசத் துன்பம் ஏற்படக் கர்மம்தான் காரணமா இறைவன் கர்மத்தினால் கட்டுப்பட்டவனில்லை. ஆனாலும் மனிதப் பிறவி என்று எடுத்து விட்டால் கர்மத்துக்குக் கட்டுப்பட்டு அதன் பிடியில் சிக்கி அவதிப்படவேண்டி வருகிறது.

மனிதன் எப்போதும் ஏதேனும் ஒரு செயலைச் செய்து கொண்டேயிருக்கிறான் விழிப்புநிலையிலும்சரி, கனவு நிலையிலும் சரி. ஆழ்ந்தஉறக்கத்திலும்சரி செயல் புரிகிறான் மனிதன். விழிப்பு நிலையில் செயல் படுவதை விளக்கத் தேவையில்லை. கனவு நிலையில் மனம் செயல்படுகிறது. திடீரென்று, தான் மன்னனாக வீற்றிருப்பதாக ஆனந்தம்கொள்கிறான், அல்லதுபோலீஸ்காரன் கையில் சிக்கிஅவதிப்படுவதாகக்காண்கிறான். கனவில் துக்கத்தையும் சுகத்தையும் மனசால் கற்பனை செய்து கொள்கிறான். இந்தஅனுபவங்களும் கர்மாவின் விளைவுதான்.

ஆகவே, நம் கர்மாக்களைப் பொறுத்துத்தான் நமக்கு சுகமோ துக்கமோவருகிறது. நல்ல கர்மாக்களைச்செய்தால்புண்ணியமும், தீய கர்மாக்களைச் செய்தால் பாவமும்


அனைவருக்கும் எங்களது தமிழ் புத்தாண்டு தின வாழ்த்துக்கள்



இன்றைய நாகரீக டிசைன்களில்
அனைவருக்கும் ஏற்ற அழகிய
ரெடிமேடு ஆடைகளுக்கு

*பெஸ்ட் ஷாப்*

**பிரீதி ஏஜென்ஸிஸ்**

H. O.: 143, ராஜவீதி
போன்: 22498

Br. 183, ஒப்பணக்கார வீதி,
போன்: 32759

**கோயமுத்தூர் - 641 001**

ரோமா பாவாடைகள் (ROMA SAREE PETTICOATS) 60 கலர்களில் கிடைக்கும்

ஒருவனை வந்தடைகின்றன. நாம் எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக் கூடாது என்று சாத்திரங்கள் வரயறுத்துக் கூறுகின்றன. புண்ணியத்தையே நாம் செய்ய வேண்டும்.

உலகத்தில்நம்மைக் கட்டுப்படுத்தும் சட்டப்புத்தகம் போன்றவை சாஸ்திரங்கள். இந்தக் காலத்தில் ஒரு காலிமனையில் கட்டிடம் கட்ட வேண்டுமென்றாலும் 'நகராண்மை, அல்லது ஊராட்சி மன்றத்தின் அனுமதி பெற்று ஆரம்பிக்கவேண்டும். இல்லாவிட்டால் நீதிமன்றத்தின் தீர்ப்புப்படி அபராதம்செலுத்த வேண்டிவரும். சட்டமிருப்பது தெரியாதே என்றால் அதைத் தெரிந்து கொள்ளவேண்டியது நம் கடமை என்றுதான் நீதிபதி சொல்வார். அதுபோல, நம் சாத்திரங்களில் சொல்லியபடி, விதிமுறைப்படி நல்லவற்றை செய்து, தகாதவற்றை— நிஷேதங்களை விலக்கி நாம் கடமையை ஆற்றவேண்டும்.

கர்மாக்கள் பொதுவாக மூன்று வகைப்படும். நித்திய கர்மா, நைமித்திக கர்மா. காம்ய கர்மா நித்திய கர்மா காலம் தவறாமல் நாள் தோறும் செய்யவேண்டும். நைமித்திககர்மா அவ்வப்போது புண்ணிய காலத்தை அனுசரித்து (கிரகணம் போன்றவை) வருவது, அதையும் விடாமல் செய்யவேண்டும். அடுத்தது காம்ய கர்மா. இது மனிதன் தன் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள பசு, தனம், தான்யம் போன்றவற்றைப் பெறச் செய்யும் யாகம் முதலியவற்றைக் குறிக்கும் ஒருவன் காம்ய கர்மாக்களைக்கூடிய மட்டும் குறைத்துக் கொண்டு நித்திய நைமித்திக கர்மாக்களைச் சரிவர தவறாமல் செய்து வரவேண்டும் கர்மா நமக்கு அடுத்து வரும் பிறவிகளைத் தீர்மானிக்கிறது. ஆடவோ மாடாகவோ பிறந்தால் மோட்சத்தை அடைய முடியாது. ஆகவே மனிதப் பிறவியில்தான் அறநெறிகளைக் கடைப்பிடித்து ஆன்ம விசாரம் செய்து துன்பக் கடலைத் தாண்டலாம். இதற்கு அசுத்தமான மனசு பிரயோஜனப் படாது. சுத்தமான மனசில்தான் குரு உபதேசம் தூயவெள்ளை நூலில் சாயம் ஏறுவதுபோல் ஏறும். மனத் தூய்மை பெற ஒருவன் என்ன செய்யவேண்டும்?

எந்தச் செயலைச் செய்தாலும் பலனை எதிர்பார்க்காமல் முறைப்படி கடமையை செய்து அதையும் ஆண்டவனிடம் அர்ப்பணித்துவிட வேண்டும். அதாவது, பற்றில்லாமல் செயல் புரியவேண்டும். அப்போது இறைவன் இட்டகட்டளையைச் செய்கிறோம் என்ற தூய எண்ணத்தினால் நம் செயல்கள் அனைத்தும் நற்செயல்களாகவே ஆகிவிடும்.

பற்று அற்று, அகந்தையை ஒழித்து, வெற்றியில் களிக்காமல் தோல்வியைக் கண்டு கலங்காமல் மனஉறுதியுடன்கடமையைச் செய்யும்ஒருவனே 'ஸாத்விகன்' என்று அழைக்கப்படுகிறான். இதையே 'கர்மயோகம்' என்பார்கள் நம் முன்னோர். கர்மயோகத்தைக் கடைப்பிடிக்க, மனிதராகப் பிறந்த எல்லோருக்கும் தகுதியுண்டு.

ஆகவே, கருணைக்கடலான இறைவனுக்கு நம்மீது கோபம் இருந்தாலும் சாஸ்திர முறைப்படி கடமையை நாம் செய்து வந்தால் அவன் சாந்தமாகி நற்கதியை அருள்கிறான்.

குண்டூசி

வருட சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 20

தனிப் பிரதி ரூ. 1-20

## அருட்பிரகாச வள்ளலார் அருளிய




— ஆனமீகன் —

உழல் உற்ற உழவு முதல் உறு தொழில் இயற்றி
மலம் ஒத்த பலபொருள் ஈட்டி வீண்
உறுவயிறு நிறைய வெண் சோறுஅடைத்து
இவ்வுடலை ஓதிபோல் வளர்த்து நாளும்
விழலுற்ற வாழ்க்கையை விரும்பினேன் ஐய!
இவவெய்ய உடல் பொய் என்கிலேன்
வெளிமயக்கோ விடமயக்கோ
எனது விதிமயக்கோ அறிகிலேன்
கழல் உற்ற நின்துணை கால் மலர் வணங்கி
நின் கருணையை விழைந்து கொண்டு
*எம்களைகணே ஈராறு கண்கொண்ட எந்தன்*
இருகண்ணே எனப் புகழ்கிலேன்
தழைவுற்ற சென்னையில் கந்தகோட்டதது உள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
*சண்முகத் தெய்வ மணியே*

பல தொழில்களைச் செய்து பயனற்ற இவ்வுடம்பை வளர்த்து விட்டேன் விதி வழியில் மாயைக்குள் சிக்கி முருகா! உன் திருவடியை போற்றி உன்னை புகழத் தெரியாமல் தவிக்கின்றேனே! என்று கந்தப் பெருமானிடம் முறையிடுகிறார் இப் *பாடலில் வள்ளல் பெருமான்.*

உலகில் சிறந்த தொழிலான உழவுத்தொழில் விவசாயம் போன்ற பல தொழில்களையும்செய்து. ஆணவம், *கன்மம், மாயை என்னும் இம்*மும்மலங்களை போன்ற தேவையற்ற பொருள்களை சேர்த்து, வயிறு *நிறைய உணவு வகைகளைத் தின்று* வலுவற்ற ஒதிமரத்தைப் போல. இவ்வுடம்மை வளர்த்து, அழிந்துப் போகும் வாழ்க்கையை விரும்பி செயலபட்டேன். அப்பனே முருகா! இக்கொடிய உடலானது பொய்யா

அனைவருக்கும் எமது மனங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்



னது, நிலையற்றது; புறமயக்கமுடையது, விடத்தினால் ஏற்பட்ட மயக்கமோ? என் விதிப்பயனால் உண்டான மயக்கமோ? ஒன்றுமே அறியாமல் இருக்கிறேன்.

வீரக்கழல் அணிந்த இரண்டு மலர் போன்ற உன் திருவடிகளை வணங்கி, உன் திருவருளை வேண்டுகின்ற எமக்கு பற்றுக்கோலாக இருந்து பன்னிரெண்டு கண்களைக் கொண்டு அருள் பாலிக்கும் கந்தப் பெருமானே! உன் புகழ்பாடி போற்ற மனிருக்கின்றேனே என்று புலம்புகிறார் வள்ளலார். மேலும், செல்வம் முதலிய நல்லனவெல்லாம் தழைத்து ஓங்கி வளரும் சென்னை மாநகரில் கந்தகோட்டத்தில் அமர்ந்து ஆட்சி புரியும் ஆறுமுகப் பெருமானே! என்னை ஆட்கொள்வாயப்பா என்று கந்தன் கழல்களைப் போற்றுகிறார்.

நாமும் வள்ளலாரின் அருள் வாக்கைப் பின்பற்றி ஷண்முக நாதனை வணங்கி நல்வாழ்வு பெறலாமல்லவா?

வானம் எங்கே ? அமுத பானம் எங்கே ?
அமரர் வாழ்க்கை அபிமானம் எங்கே ?
மாட்சி எங்கே ? அவர்கள் சூழ்ச்சி எங்கே ?
தேவ மன்னன் அரசாட்சி எங்கே ?
ஞானம் எங்கே ? முனிவர் மோனம் எங்கே ?
அந்த நான்முகன் செய்கை எங்கே ?
நாராணன் காத்தலை நடத்தல் எங்கே ?
மறை நவின்றிடும் ஒழுக்கம் எங்கே ?
ஈனம் அங்கே செய்த தாருகனை ஆயிரம்
இலக்கம் உறு சிங்கமுகனை
எண் அரிய திறல் பெற்ற சூரனை மறக்கருணை
ஈந்து பணி கொண்டிலை எனின்
தானம் இங்கு ஏர் சென்னையில் கந்தக்கோட்டத்து உள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே

தேவர்களை துன்புறுத்தி வந்த அசுரர்களை அழித்து, காத்தருள வில்லை என்றால் உலகம் ஏது? இவ்வுலகம் நிலைத்து நல்லொழுக்கத்துடன் இருக்க வகை செய்த முருகப் பெருமானை எவ்வளவு அழகாக துதித்துப் பாடுகிறார் வள்ளல் பெருமான், படியுங்கள்.

மூன்று உலகங்களிலும் இழிவான செயல்களை புரிந்து வந்த யானை முகத்தை உடைய தாருகாசுரனையும் ஆயிரம்சிங்க முகங்களைக்கொண்ட சிங்கமுகாசுரனையும், வரங்கள் பல பெற்றுஎண்ணரிய வல்லமைபெற்ற சூரன் எனப்படும் பெரியசூரனையும், வீரப்போர் புரிந்து முருகா! உன் கட்டளைப்படி அவர்களை நடக்கச் செய்யவில்லைஎன்றால்; தேவர் உலகம் ஏது? தேவர்கள் உட்கொள்ளும் அமுதபானம் எங்கே? தேவர்களின்

வாழ்க்கை எங்கே? அவர்களுடைய பெருமை, ஆராய்ச்சி, அரசாட்சி, தேவர் குலத்தலைவனான இந்திரன் முதலானவர்கள் எங்கே?

முனிவர்களின் மோனத்தவம், ஞானம், பிரமனுடைய படைப்பு, காத்தல், படைத்தல் வேதங்கள், இவைகள் எல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் போயிருக்குமே! உன் அரிய பெரிய செயல்களினால் அல்லவோ, எல்லாம் ஏற்பட்டது என்று முருகன் பெருமையைப் பாடுகிறார் வள்ளலார்.

மேலும், தானம், தருமம் போன்ற நற்பண்புகள் இவ்வுலகில் நிலை பெற்று விளங்குவதற்கு காரணமான சென்னை மாநகரில் கந்த கோட்டத்தில் எழுந்தருளி நல்லாட்சி செய்துவரும் ஆறுமுகப் பெருமானே! உன் கருணையால் என்னை காத்தருளாவாய் என்று வேண்டுகிறார் கந்தகோட்டக்குமார பெருமானை, நாமும் அடிகளாரின் அறிவுரைப்படி வேலாயுதனை வணங்கி நற்கதி அடையலாமல்லவா?

(தொடரும்)

---


அனைவருக்கும் எமது மனங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்

கரணை ஜவுளி மாளிகை

ராஜ வீதி - கோயமுத்தூர். போன: 22881

Karana CLOTH PALACE


---


உலகப் புகழ் பெற்ற ஸ்ரீகணேஷ்ராம்ஸ் 777 பிராண்ட் உணவுப் பொருள்கள் உங்கள் அருகாமையில் உள்ள கடைகளில் இப்பொழுது கிடைக்கிறது.

- திடீர் புளியோதரை பேஸ்ட்
- திடீர் வத்தல் குழம்பு பேஸ்ட்
- திடீர் மிளகு ரசம் & தக்காளி ரசம் பேஸ்ட்
- டாம்-எக்ஸ் (TAM-EX) &
- கார்லிக்ஸ் (GARLIX)
- கரகரப்பான, முறுமுறுப்பான அப்பளம் மற்றும் ஊறுகாய்

GANESHRAM'S ANALYTICAL LABORATORIES MADRAS-1 777 (REGD)

ஸ்ரீகணேஷ்ராம் & கோ.,

சென்னை - 600 001. போன்: 20401 & 20402

# குலசேகர அமுதம்

கொன்று போடுகிற கோபத்திலும் 'போ' என்று விரட்டும் தாயை விட்டுப் பிரியமுடியாத குழந்தை. வாளால் அறுத்துச்சுடுகின்ற மருத்துவனிடமும், மாளாத காதல் கொண்ட நோயாளன். இவர்களைக் காட்டிய ஆழ்வார், வித்துவக்கோட்டுப்பதிகத்தில் மேலும், உயிர்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை உணர்ச்சியோடு உவமைகளின் துணைகொண்டு விளக்குகிறார்.

எப்போது பார்த்தாலும் குடி... தீயபழக்கங்கள். இவனும் ஒரு மனிதனா? என்று ஊர் ஒதுக்குகிறது. அப்படிக்கண்டார் இகழ்வனவே செய்யும்கணவனை அவன் மனைவி 'கதி'யாக நம்பியிருக்கிறாள் அவனை விட்டால் அவளுக்கு வேறு துணை இல்லை. குலமகள் அவள், என்றேனும் அவன் திருந்தி விடுவான் என்ற நம்பிக்கை அவளுக்கு! ஊருக்கு எப்படியானாலும் அவளுக்கு அவனே துணை, சார்பு, கதி எல்லாம்!

கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்
கொண்டானை யல்லால் அறியாக்குல மகள்போல்
விண்டோய் மதிள்புடைசூழ் வித்துவக் கோட்டம்மா—நீ
கொண்டாளாயாகிலும் உன்குரைகழலே கூறுவனே

இன்று மக்களாட்சி, மக்கள் பிரதிநிதிகள் நாட்டை ஆள்கின்றனர். ஆனாலும் ஐந்து ஆண்டுகளுக்கு, நாடு முழுதும் அவர்களது ஆட்சியையே நம்பி இருக்கிறது. இது இன்றைய நிலை, கோனாட்சி நடைபெற்ற காலத்தில் மன்னன், மக்களை மதியாத கொடுங்கோலனாக இருந்தாலும், அவன் செங்கோலையே நம்பியிருந்தனர் குடி மக்கள்! அது போல ராஜ ராஜனாகிய இறைவனே! நீஎன்னைக் கவனித்து என் துயரத்தை நீக்காவிட்டாலும் உன்னையன்றிஎனக்குப்புகல்இல்லை இந்தக்கருத்துக்களை உள்ளடக்கிய ஆழ்வார் பாசுரம் இது:

மீன் நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட்டம்மா—என்
பால் நோக்காயாகிலும் உன் பற்றல்லால் பற்றிலேன்
தான் நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடி போன்றிருந்தேனே.

உவமைப் பாடலுக்குள் ஒரு உவமை நீர் நிறைந்த வயல்களில் மீன்கள் துள்ளித் துள்ளி விளையாடிப் பார்க்கின்றன. ஆனால் இறைவனே உன் பார்வை என்மீது விழவில்லையே என்ற குறிப்பு தொனிக்கிறது.

---

*இரா. சுராஜ்*

இந்தப் பதிகத்திலேயே தலை சிறந்த பாடல் இது அற்புதமான உவமை. ஒரு பறவை. எப்போதும் கப்பலின் மேல் தளத்தில் உள்ள கூம்பில் அது இடம்பிடித்துக் கொண்டு கப்பல் போகும் போதும் வரும்போதும் அந்த இடத்தைவிட்டு அகலாது. ஒருசமயம் நடுக்கடலில் அதற்கு ஒரு சிந்தனை தோன்றியது! என்ன வாழ்க்கை இது? எப்போது

WITH BEST COMPLIMENTS

FROM

BIMETAL BEARINGS LIMITED

No. 114, RACE COURSE ROAD,

COIMBATORE - 641 018.

Phone : 3 2 5 7 3 — Cable : "BIMITE"

MADRAS ● COIMBATORE ● HOSUR

பார்த்தாலும் இந்தக்கப்பல் கூம்பில் தானு நம் வாழ்வு அமைவது, வேறு இடம் இல்லையா? என்று எண்ணி, அது கூம்பைவிட்டுப் பறக்கத் தொடங்கியது. வேறு புகலிடம் தேடும் உற்சாகத்துடன்.

ஆனுல் கண்டது என்ன? கடல்... கடல் ... கடல் ... தண்ணீர்... தண்ணீர். பறவை அமர எங்குமே இடமே இல்லை பறவைக்குப் பயமே வந்து விட்டது.

இந்த அலை கடலில் விழுந்து அழிவதைத் தவிர வேறு வழி இல்லை தன் பலத்தைத் திரட்டி மீண்டும் பறந்து வந்து பழைய கப்பலின் அருகேவந்துசேர்ந்தது. அப்பாடா! என்று ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது அதனிடமிருந்து. இதைவிட்டால் ஏது புகலிடம்? இறைவனே உனது திருவடிகளையல்லால் வேறு புகலிடம் இல்லை கப்பல் கூம்பைப் புகலிடமாகக் கொண்ட மாப் பறவைபோல, நானும் உன் திருவடிகளை விட்டு இனி வேறு புகலிடம் தேடமாட்டேன். இதோ இத்தகைய நல்ல பொருள் கொண்ட ஆழ்வாரின் பாடலைப் படியுங்கள்.

வெங்கட்டின் களிறு அடர்த்தாய் வித்துவக் கோட்டம்மானே
எங்குப்போல் உய் கேன் உன் இணையடியே அடையல்லால்
எங்கும் போய்க் கரைகாணுது எறிகடல் வாய்மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேரும் மாப்பறவை போன்றேனே.

எங்கும் வரட்சி. மழை வராதா என்று வானத்தை மக்கள் இனமே பார்த்து நிற்கிறது. இது இன்றைய நிலை. ஆனுல் பயிர்கள் எப்போதுமே வான் பார்த்திருக்கும் 'மானம் பார்த்த பூமி' என்று சில இடங்களைக் கூறுவார்கள் எவ்வளவுதான் காய்ந்து பூமிப் பயிர்களை வானம் மறந்துவிட்ட நேரத்திலும், அந்தக் கருத்து எழும் மேகக்கூட்டங்களையே எதிர்பார்த்திருக்கும் பயிர்களைபோல், 'இறைவனே! நீ என்னை மறந்து இருந்தாலும் என் துயரங்களை நீக்காவிட்டாலும் என் மனம் நிறைய உன் பக்தியே நிறைந்து உன்னையே எண்ணிக்கொண்டிருப்பேன் என்கிறார் குலசேகராழ்வார்.

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர் வீட்டாவிடனும் வித்துவக் கோட்டம்மா என்
சித்தமிக வுன்பாலே வைப்பன் அடியேனே

குளங்களில் தாமரைகள் கதிரவன் வரவு கண்டால்தான் மலருகின்றன. அதற்குப் பதிலாக சிவந்த தணலைக்கொண்டு வந்து சூடாக்கினுலும், தாமரை இதழ் விரிப்பதில்லை அதுபோன்று இறைவனே உனது அந்தமில்லாத பெருமைகளுக்கல்லாமல் எனது மனம் குழைய மறுக்கிறது. கதிரவனை நாடும் தாமரைபோல் உனது திருவடித் தாமரைகளையே நான் நாடி இருக்கிறேன். உலகத்திலே உள்ள பல ஆறுகளும் ஓடி, கடலில் கலப்பதையே தம் இலட்சியமாகக் கொண்டிருக்கின்றன. இறைவனே! உனது கருணையிலே பெருமையிலே அடைக்கலம் புகுவதைத் தவிர எனக்கு வேறு புகழ் இல்லை.

வித்துவக்கோட்டுப் பெருமானே! நீள்கின்ற பெருஞ் செல்வத்தை

விரும்பாமல் உன் அருளையே விரும்பி நிற்பவனிடம் தான் செல்வம் சேருகிறது. இறைவனே! நான் வேண்டுவதெல்லாம் மற்றொரு பொருளையல்ல! உன் அருளைத்தான்!

இப்படி ஒன்பது பாடல்களில், தாய் சேய், கொண்டான் குலமகள் செங்கோல், குடிமக்கள், மருத்துவன் நோயாளன், கப்பல், பறவை, கதிரவன், கமலம், வான், பயிர், கடல்–ஆறு, இவைகளைக் கூறிய ஆழ்வார், பதிகத்தை நிறைவு செய்கிறார்.

“வித்துவக் கோட்டம்மானே! நீ என்னை ஆதரிக்க வேண்டும். நீ ஆதரிக்கவில்லையென்றாலும் கூட எனக்கு உன்னைவிட்டால் வேறுகதி இல்லை. வேறு யாரையும் நான்பற்றாக அடையமாட்டேன். உன் திருவடிகளே எனக்குத் தஞ்சம் இப்படி இறைவனைச் சரணடைந்த வெற்றி நிறைந்த வேல் பிடித்த சேனைத்தலைவனான சேரமன்னர் மன்னராகிய குலசேகரர் கூறிய இந்த நல்ல தமிழ்ப் பாடல்கள் பத்தையும் வல்லவர்கள், படிப்பவர்கள் சிந்திப்பவர்கள் நண்ணார் நரகமே! என்று பலன் கூறி பதிகம் நிறைவு பெறுகிறது.

வித்துவக் கோட்டம்மா! நீ வேண்டாயே யாயிடினும்
மற்றாரும் பற்றிலேனென்று அவனைத் தாள்நயந்த
கொற்ற வேல் தானைக்குல சேகரன் சொன்ன
நற்றமிழ் பத்தும் வல்லார் நண்ணார் நரகமே

---

சாந்தியும், செழிப்பும் கோழைகளை அபிவிருத்தி செய்யும் கடுமையான நிலையே தைரியத்தின் தாய்.
—ஷேக்ஸ்பியர்.

---

அனைவருக்கும் எங்களது தமிழ் புத்தாண்டு தின வாழ்த்துக்கள்





# தியாகராஜ வைபவம்

ஸ்ரீஸ்வாமிகள் பகவானின் குண கணங்களைப்பற்றிகுறிப்பிட்டுள்ளார் தமது கிருதிகளில். ஸ்ரீராமசந்திரனை தனது இஷ்ட தெய்வமாக புகழ்ந்து கூறும் ஸ்வாமிகள். மற்ற தெய்வங்களை பழிக்கவில்லை. அவர் எல்லா மூர்த்திகளின்மீது கீர்த்தனைகள்பல இயற்றியுள்ளார்.

ராகம் : காபி — தாளம் : ரூபகம்

பல்லவி

நித்யரூப எவரி பாண்டித்ய மேமி நடுசுரா (நி)

அனுபல்லவி


ஸத்யமைன ஆக்ரு மரி ஸாமர்த்தியமு கலதா (நி)

சரணம்

பானு பகலு ரேபு ரத்ன ஸானுஜுசுட்ருடா
பூனி சேஷுடமித பார-பூமி மோயடா
வினுலத்து காசீபதி நீ நாமமு பல்கடா
மானி த்யாகராஜ வினுத-மஹிமாஸ்பதமகு நீமுந்து (நி)

நித்யரூப! எவருடைய சாமர்த்தியம் உபயோகமுள்ளது. உன்மையை தனது ஆஸ்பதமாக கொண்டுள்ள உனது ஆணையை மீறக் கூடிய ஒரு பலம் யாருக்கு உள்ளது கிடையாதுஎன்று சொல்ல வேண்டும் மேருமலையை உன் ஆணையின் பேரில் சூரியன் பகலும் இரவும் சுழலுகிறதல்லவா? பூமி பாரத்தை சற்றும் தயங்காமல் தன் மீது வைத்துக் கொண்டு ஆதிசேஷன்உன் ஆணையைக்கீழ்படியவில்லையா? காசிக்ஷேத்திரத்தில் சிவபெருமான் எல்லோருக்கும். உமது தாரகமந்திரத்தை உபதேசிக்கிருர்நீரேஎல்லோருக்கும் பெருமை மிகுந்தவர். உம்மையே பெருமை எல்லாம் சாரும். நீர் இல்லையேல் யாதும் இல்லை. ஆகவே எனக்கும் (தியாகராஜனுக்கும்) அருளும் என்று பகவானை வேண்டுகிருர் ஸ்வாமிகள்.

விளக்கம் .- பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ.,பி எல., சென்னை

தமிழ்ப் புத்தாண்டு நன்னுளில் எமது அன்பு வாழ்த்துக்கள்

- கோபுர மார்க் பன்னீர்
- சந்தனுதித் தைலம்.
- லவ் பேர்ட்ஸ் பத்தி
- குல்கந்து, ஓமதி நீர்.

K·T·R

பொன்னுரங்கன்னித் தைலம், சந்தன பத்தி, பெண்டாஸ்டிக் பத்தி



K.T.R. வாசனுதி திரவியசாலை

திருவாரூர், 610001.. தமிழ்நாடு.



# லக்ன பலன்

## குண்டூசி ஜோஸ்யர்

(16 -;4 - 83 முதல் 15 - 5 - 83 வரை)

## மேஷம்

குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலைஏற்படும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு பதவி உயர்வு உண்டாகும். மன அமைதி பாதிக்கப்படலாம். அதிகாரிகளின் உதவி இருக்கும். வியாபாரிகளுக்கு தூர தேசப் பிரயாணங்கள் செய்யும் வாய்ப்பும் உற்சாகமான போக்கும் கலகலப்பான வாழ்க்கையும் அமையும். பொருளாதார நிலை மகிழ்ச்சியாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத லாபங்களும்(வாகன ப்ராப்தியும் ஏற்படும். தொழில்வியாபாரத்துறையில் உள்ளவர்களுக்கு (அனுகூலமான சூழ்நிலையே இருக்கும்.

*அதிர்ஷ்ட தினங்கள்: ஏப். 2, 6 7, 9*

## ரிஷபம்

வழக்குவியாஜ்ஜியங்களில்வெற்றி ஏற்படக்கூடும். தொழில்வியாபாரத் துறையில் உள்ளவர்களுக்கு அதிக அலைச்சலும் மனசஞ்சலங்களும் உண்டாக வாய்ப்புண்டு உத்தியோகஸ்தர்களுக்கு தொல்லைகள் குறையும். சிலருக்கு சொத்துகள் வந்து சேரவும் வாய்ப்புண்டு, சிலரின் தேக நலம் பாதிக்கப்படலாம். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். பொதுவாக இன்பமும்மன அமைதியின்மையுமான சூழ்நிலை மாறிமாறி ஏற்படலாம்.

*அதிர்ஷ்ட தினங்கள்: ஏப்ரல் 15, 27, 30.*

## மிதுனம்

சிலர் புதிய முயற்சியில் ஈடுபட்டு பெரியோர்கள்ஆசியுடன்வாழ்க்கையில் முன்னேற்றச் சூழ்நிலையை அடைவர்.வழக்குகளில்வெற்றி ஏற்படலாம். கடன்கள் நிவர்த்தியடைந்து மன அமைதி ஏற்படும். தேகநிலை திருப்திகரமாக இருக்கும். தொழில்வியாபாரத்,துறையில் உள்ளவர்கள் புதிய கூட்டு வியாபாரங்களில்ஈடுபட வாய்ப்புண்டு. உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு பதவி உயர்வும்இடமாற்றமும் ஏற்படலாம் மாணவர்கள் கல்வியில் கவனம் குறைந்து இருப்பர்.

*அதிர்ஷ்ட தினங்கள்;*
*ஏப்ரல் 13, 15, 22, 29*

## கடகம்

சிலருக்கு எதிர்பாராத பணவரவுகளும் வழக்குகளில் வெற்றியும் ஏற்படும்.தொழில்வியாபாரத்துறையில் உள்ளவர்களுக்கு தங்கள்தொழிலில் மேன்மையான பலன்களை அடைவர். உத்தியோகஸ்தர்கள் கடினமான உழைப்பு மேற்கொள்ள வேண்டியிருக்கும் மாணவர்கள்கல்வியில் மேன்மையடைவர். சிலரின் தேகநிலை பாதிக்கப்படலாம். குடும்பத்தில் பொதுவாக மகிழ்ச்சியும்சந்

தோஷமான சூழ்நிலையும் நிலவும். அரசியல்வாதிகள் ,பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுமேன்மையுடன் விளங்குவார்கள்.

அதிர்ஷ்ட தினங்கள் . ஏப்ரல் 6, 13, 16, 28.

## சிம்மம்

குடும்பத்தில் சுப காரியங்களும் தெய்வ வழிபாட்டில் மனம் ஈடுபடவும் சூழ்நிலை ஏற்படலாம், காரியங்கள்சுலபமாகவெற்றியடையும்,சகல விதங்களிலும் பலநன்மைகள் ஏற்படவாய்ப்புண்டு. உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகாமல் கவனமாயிருத்தல்நலம்.தொழில் வியாபாரத்துறையில் உள்ளவர்களுக்கு தொழிலில் மேன்மையும் சுமுகமாக சூழ்நிலையும் அடைவர். மாணவர்கள் கல்வியில்சிறந்துவிளங்கி ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுவர். அரசியல் வாதிகளுக்கு வெளியூர் பயணங்கள் ஏற்பட வாய்ப்புண்டு.

அதிர்ஷ்ட தினங்கள் : ஏப்ரல் 1, 8, 11, 22, 29.

## கன்னி

பொருளாதார நிலையில் சிலவுகள் ஏற்பட்டு கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படும். இருந்தாலும் மனதிடம் ஏற்பட்டு தெய்வ வழிபாட்டில் மனம் ஈடுபடும் புதிடவீடு அல்லது மனைவாங்கவும்சில்ருக்குஇடமுண்டு உத்தியோகஸ்தர்களுக்கு மன நிம்மதி ஏற்படும். தொழில் வியாபாரத் துறையில் உள்ளவர்களுக்கு கொஞ்சம் எதிர்பாராத நிலைமாற்றங்கள் ஏற்படலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் சிறப்புற்று விளங்குவர். வழக்குகள் வெற்றியடையும். அரசியல் வாதிகள் பொதுவாழ்வில் புகழும் கௌரவமும் அடைவர்.

அதிர்ஷ்ட தினங்கள் : ஏப்ரல் 6 11, 22, 24.

## துலாம்

குடும்பத்தில் அமைதியற்ற சூழ்நிலைகாணப்படும்.தொழில்வியாபார துறையில் உள்ளவர்கள் மேன்மையான பலன்களையடைவர், நல்ல லாபம் காணவும்இடமுண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு உத்தியோக உயர்வில் மற்றவர்களால் போட்டி ஏற்படலாம். மாணவர்கள்கல்வியில் கவனம்குறைந்துஇருப்பர்.அரசியல் வாதிகளுக்கு பணவிரயமும் ,மன அமைதியின்மையும் ஏற்படலாம்.

அதிர்ஷ்ட தினங்கள்: ஏப்ரல் 1, 2, 5, 10, 13.

---

அனைவருக்கும எமது தமிழ்ப் புத்தாண்டு தின நல் வாழ்த்துக்கள்

திருமண பட்டு ஜவுளிகளுக்கு
சாரதா ஜவுளிக்கடை
ராஜ வீதி, கோயமுத்தூர்.
போன்:23127

## விருச்சிகம்

சிலவுகள் அதிகமாகி பணபற்றுக் குறை ஏற்படும். உத்தியோகஸ்தர் செல்வாக்கு பெற்று முன்னேற்றத் துடன் விளங்குவர். தொழில் வியா பாரத் துறையில் உள்ளவர்கள் அலைச்சலினாலும், அதிக உழைப்பா லும் பாதிக்கப்பட்டாலும் எதிர்பா ராத வருமானம் அடையவும்வாய்ப் புண்டு. மாணவர்கள் கல்வியில் கவ னம் செலுத்துதல் நன்மை அளிக் கும். அரசியல்வாதிகளின்புகழ்சிறிது பாதிக்கப்படலாம். கலைத்துறையில் உள்ளவர்களுக்குசிறிதளவுபொருள் சேர்க்கைஉண்டாகும்.

அதிர்ஷ்ட தினங்கள்: ஏப்ரல் 4, 11, 18, 22, 29.

## தனுசு

குடும்பத்தில் மனஸ்தாபங்களும் கலக சூழ்நிலையும் ஏற்பட வாய்ப்பு உண்டு. சிலரின் உடல்நிலைபாதிக்கப் படலாம் தொழில்வியாபாரத் துறை யில்உள்ளவர்களுக்கு எதிர்பாராத கஷ்ட நஷ்டங்கள் உண்டாகலாம். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரி களின் ஆதரவைப் பெறுவர். மாண வர்கள் ஆசிரியர்களின் கோபத் திற்கு ஆளாகலாம். கல்வியில்கவன முடன்இருத்தல்அவசியம் அரசியல் வாதிகளின் செல்வாக்கு கவுரவம் சாதாரணமாகவே இருந்துவரும்.

அதிர்ஷ்ட தினங்கள்: ஏப்ரல் 4, 7, 13, 25, 29,

## மகரம்

பொருளாதார நிலைதிருப்திகரமாக இருக்கும். தொழில் வியாபாரத் துறையில் உள்ளவர்களுக்கு அனு கூலமான பலன்கள் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரி களின் ஆதரவைப் பெறுவர். சில ருக்குபதவிஉயர்வும்ஏற்படும். கலைத் துறையில் உள்ளவர்களின் வாழ்க் கையில்பிரகாசமான சூழ்நிலை உண் டாகும். அரசியல்வாதிகள் எவ்வித காரியங்களிலும் ஈடுபடாமல் இருப் பது நலம். மாணவர்கள்கல்வியிலும் விளையாட்டிலும்சிறந்துவிளங்குவர்.

அதிர்ஷ்ட தினங்கள்: ஏப்ரல் 1, 2, 8, 4, 7, 15.

## கும்பம்

பொருளாதாரம் சிறப்பான நிலை யில் இருக்கும், தொழில்வியாபாரத் துறையில் உள்ளவர்கள் முன்னேற் றம்அடைவர். இவர்கள் குறுக்குவழி யைதேடாமலிருத்தல்நலம்பயக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு மேலதி காரிகளின் ஆதரவு ஏற்படும். கலைத் துறையில் உள்ளவர்களுக்கு மதிப்பு ஏற்பட்டு பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும். மாணவர் கள் கல்வியில் சிறந்து விளங்குவர். அரசியல்வாதிகளுக்கு சிறந்த செல் வாக்கும் புகழும் ஏற்படலாம்.

அதிர்ஷ்ட தினங்கள் : ஏப்ரல் 1, 5, 8, 15, 27.

## மீனம்

பணப் பற்றுக்குறை இருந்தாலும் சிக்கனமான நடவடிக்கையின்மூலம் அனுகூலமான பலன்கள் ஏற்பட வாய்ப்புண்டு உத்தியோகஸ்தர்கள் வழக்கம்போல் உயர்ந்த பலன் களையே அடைவர். தொழில் வியா பாரத்துறையில் உள்ளவர்களுக்கும் நல்லவருமானம் இருந்துவரும். சில ருக்கு தேகநிலையும் பாதிக்கப்பட லாம் மாணவர்கள் தங்கள்கல்வியில் அக்கறை எடுத்துக் கொள்ளுதல் அவசியம். கலைத்துறையில்உள்ளவர் களுக்குப்போதிய வருமானம் வந்து கொண்டே இருக்கும். அரசியல் வாதிகளுக்கு அலைச்சலும்வெளியூர் பிரயாணங்களும் ஏற்படலாம். இருந் தாலும் சாதகமானபலன்களேயேற் படும்.

அதிர்ஷ்ட தினங்கள்: ஏப்ரல் 4, 14, 15, 30.

# திருச்சியில் ஜவுளி மாளிகை

*

புதுமைப் பொலிவூட்டும் அருமைப் பட்டு ரகங்களை
உடுத்தி மகிழுங்கள், அழகுக்கு அழகூட்டும் அற்புத வடிவமைப்பு
அணிந்து மகிழ எண்ணற்ற ரகங்களில் உங்களுக்கு

வழங்குகிறது **கீதா**

மற்றும் உயர் மில்களின் தரமான ஜவுளி ரகங்களைத் தேர்ந்தெடுக்க
உங்களின் சிறந்த ஸ்தாபனம்

---

*பட்டு ஜவுளிகளை சௌகர்யமாக தேர்ந்தெடுக்க*
*குளுகுளு வசதியுடன் தனியான இடம்*
*சிறப்பாக உள்ளது.*

---

# கீதா சில்க் & சாரி பஜார்

## 31, N.S.B. ரோடு, திருச்சி - 620 002

போன் : 24410 தந்தி : DELIGHT

---

*எல்லோருக்கும் எமது மனமார்ந்த*
*தமிழ்ப் புத்தாண்டு தின நல் வாழ்த்துக்கள்*

# ஆன்மீக சிந்தனை

உலகெங்கும் மனிதனை, அகம், அந்தகாரம், அறியாமை பெரும்பாலும் ஆட்டிப் படைக்கிறது நிதர்சனமாக அவன் காணும் காட்சிகளை கனவுபோல் நினைத்து அறவே மறந்துவிடுகிறான்.

டாக்டர்களே வியக்குமாறு—கை விடப்பட்ட நோயாளி, எந்தவித சிகிச்சைக்கும் தேறாதவன். பிழைத்து விடுகிறான்.

பெரிய ரயில் விபத்தில் சிக்கிய சிலர் ஒருவித காயமுமின்றி தப்பி விடுகிறார்கள்.

பெரிய விபத்தில் சிக்கி தூள் தூளான ஆகாய விமானத்தில் செல்ல இருந்த சிலர் கடைசிநேரத்தில் தன் பிரயாணத்தை மேற்கொள்ளவில்லை.

மழையாலும், புயலாலும் இடிந்து விழுந்த வீடுகளில், குடிசைகளில் ஒருசிலர் மாண்டுபோகவில்லை.

பாதையில் மரத்தில் மோதியபஸ்ஸால் பின்புறஇடங்களில்இருந்தவர்கள் சிலர் ஒருவித காயமுமின்றி தப்பினர். சிலர்முதல்சிகிச்சை அளித்து காப்பாற்றப்பட்டனர்.

திருவிழா அரசியல் கூட்டங்களில் திடீரென்று ஏற்பட்ட விபத்தால் ஒருவர் மேல் ஒருவர் மிதித்துக் கொண்டு ஓடியதால் பலர் ஒருவித உபாதை இல்லாமல் தப்பிக்கொண்டனர்.

சமுத்திரத்தில்விழுந்து தற்கொலை செய்துகொள்ளவந்த காதலர்களை மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் காப்பாற்றினார்கள்.

பலமுறை இருதய நோயினால் பாதிக்கப்பட்டவர்வைத்திய நிபுணர்களால் கைவிடப்பட்டவர், வித்தையாக வாழ்கிறார்.

மேலே குறிப்பிட்ட பல நிகழ்ச்சிகளுக்கு எதிர்மாறாக பலவித காரணங்களில் பலர்திடீர்மரணம் எய்துகிறார்கள்.

உலகெங்கும் வியாபிக்கும் மக்கள் யாவருக்கும் நிதர்சனமாக தினசரி ஏற்படும் நிகழ்ச்சிகள் இவை.

இவைகள் நமக்கு எதை உணர்விக்குறது. ஜனனம், மரணம் என்ற ஒன்று மட்டும் எவராலும் நிர்ணயித்துவிடமுடியாத புதிர்.

பணமிருந்தும், வசதிகள், ஆரோக்கிய சூழ்நிலை, சத்துள்ள உணவு, எந்தபணக்காரர்களையும்காப்பாற்றி விடுவதில்லை,

செல்வ செருக்கும், பேரும்புகழும், அந்தஸ்தும், செல்வாக்கும் ஒரு அற்பகாரணத்தால் அவர்களை மரணத்திலிருந்து மீட்க முடியவில்லை.


புலர் உயிர் ஊசலாடிக் கொண்டு செயற்கை முறை உணவு கொடுக்கப்பட்டு, தன் நினைவுஉணர்ச்சிஇல்லாமல் பல மாதங்கள் வருடங்கள் அவஸ்தைக்கு உள்ளாகிறார்கள்.

கண்ணாடியில் நம்முகம்தெளிவாக தெரிவதுபோல் கேட்டும், படித்தும் நேரிடையாகப் பார்த்தும்நம் 'அகம்' மாறுபடவில்லையென்றால் மேற்சொன்னவைகளைத் தவிர நம்மை உயிரோடு நம் அகந்தைதான் வதைக்கும்.

சரணாகதி ஒன்றே நல்ல மருந்து, உங்கள் கர்மாவை தூய்மையாகச் செய்து ஆண்டவன் திருப்பாதங் கமலங்களில் சரணடையுங்கள். பலாபலன்களை பரமாத்மா பார்த்து கொள்வார்.

---

T. V. வைத்தியநாதன்



உங்கள் அழகுக்கு
அழகூட்டும் குங்குமம்
புதிய சுமங்கலி டீலக்ஸ் குங்குமம்
இன்று தன் இயற்கை எழிலை எந்த மங்கையும் மேலும் பொலிவுறச் செய்யலாம். உங்கள் ஒப்பனைக்கு மேலும் மெருகூட்டுவது சுமங்கலி குங்குமம்.
கொஞ்சம்கூட வெளியே சிந்தாத சிறந்த பாக்கிங்கில் வரும் குங்குமம் அது ஒன்றே, ஆகவே அது உங்கள் கைப்பையிலோ அல்லது டிரஸ்ஸிங் டேபிள் மேலோ வைத்துக்கொள்ள உகந்தது. சுமங்கலி உங்களுக்குப் பிடித்தமான பலவித வண்ணங்களில் கவர்ச்சியான ஜாடிகளிலும், பௌடர் உருவிலும் மற்றும் டீலக்ஸ் பர்ஸ் பாக்கிங்குகளிலும் கிடைக்கிறது.
டீலக்ஸ் குங்குமம்
சுமங்கலி
ஒரு கேசவர்த்தினி தயாரிப்பு
OBM 4952

*பக்த மீரா அருளிய*

# கிரிதர கோபாலா

(ஸ்ரீனிவாஸ ஜகந்நாராயணன்)

பாடல் 6 :

தோழி! என் இரு கண்களும் கிருஷ்ணனுடைய அனுபம வடிவ அழகுகளைப்பருகிச் சாப்பிடுவதற்கு லோபியைப்போல மன நிறைவு பெருமல் இருக்கின்றன அதாவது, மறந்துகூடக் கண் இமைகள் மூட மறுக்கின்றன. எப்பொழுதும் பக வானுடைய காட்சியை அடைவ தற்கு இந்தக் கண்கள் அவருடைய ஒவ்வொரு மயிர்க்காலையும் நகத்தி லிருந்து தலைவரை ஒவ்வோர் அங்கத் தையும் கண்டுகண்டுஆசை தீராது திரும்ப மறுக்கின்றன. அவருடைய முகமண்டலம் சந்திர கிரணங்களைப் போலக் குளிர்ச்சியாகவும், ஒளி மய மாகவும் இருக்க, அவருடைய அமைதியான தன்மை நான்கு புறங் களிலும்அழகையும்குளிர்ச்சியையும் பரவச் செய்கின்றன.

ஆனுல், என் சுற்றத்தவரும், அக் கம்பக்கத்தவரும்என்னை ஒவ்வொரு நிமிடமும் கட்டாயப்படுத்தி, கிருஷ் ணனிடமிருந்து என் பக்தியைப் பிரிக்க நினைக்கிருர்கள், என்னைத் தடுக்க நினைக்கிருர்கள், ஆனுல், இதில் என் கண்களன்றே அபரா தம் செய்திருக்கின்றன. அவையே என்னை முழுமையாக அவரிடம் அளித்துவிட்டன. இது நல்லதோ கெட்டதோ எனக்குத் தெரியாது. நான் முழுமையாக அவரிடம் ஈடு பட்டுவிட்டேன் கிருஷ்ணனைவிட்டு ஒரு கணமும் நான்பிரியமாட்டேன். ஒருகணமும் அவருடைய விரக துக் கத்தை பொறுக்கமாட்டேன்.

பாடல் 7 :

நந்த பிஹாரி (கிருஷ்ணன்) என் உள்ளத்தில் வசிக்கிருர். இருப்பில் சிவப்புக் கற்கள் பதித்த கடிபந்தம் என்ற பட்டை ஒன்றைஅணிந்துள் ளார். வயிரக்கற்கள்,முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட மகுடத்தை அணிந்துகொண்டிருக்கிருர். நான் அவருடைய கால்களின் அடியில் கதம்பமரத்தின் கிளையின் நிழலில் நின்றுகொண்டிருந்தேன். பிரபு அதன்மேல் நின்றுகொண்டிருந் தார். இந்தபிரபு என் உடலின் அழ கைக்கண்டு புன்முறுவல்செய்கிருர். ஆகவே என் ஸ்வாமி கிரிதர நாதர் அவரைக் கண்டு என் கண்கள் ஆனந்த கண்ணீரை சொரிந்த வண்ணமிருக்கின்றன.

பாடல் 8 :

என்னுடன் மிகுந்த அன்புடன் என் பிரபு கிருஷ்ணன் கலந்துவிட் டார். அவர் என்னை வந்தடைந்த காரணத்தினுல் என்னிடம் சோகமோ கவலையோ,சந்தேகமோ ஒன்றுமில்லை. நான் கிருஷ்ணனை விலைக்கு வாங்கிவிட்டேன். என் னிடம் துன்பங்களோதிருஷ்டியோ ஒன்றுமில்லை. அவருடைய தலையின் மீது மயிலின் இறகுகள் கொண்ட முகுடம், உடலின்மீதுபட்டுப்பீதாம் பரம், நான்மேகவண்ணம்கொண்ட சுந்தரனை என் கணவனுக வரித்து விட்டேன் இவரே எனக்கு ஒவ் வொரு பிறவியிலும் கணவன், நானே சௌபாக்யவதி. ஆகவே என் பிரிய நாயகனுடன் ஆனந்தக் கிரீடைகளைச் செய்வேன், அவ ருடைய இனிய அதர பானத்தைப் பருகுவேன். ஆகவே என் கணவர், ஸ்வாமி கிரிதரநாதர், அவரைக் காண்பதால் நானே பேரின்பம் கொள்கிறேன். நான் மிகவும் பாக் கியசாலி.

### பாடல் 9 :

எனக்கு இராமபக்தி சாம்ராஜ்யத்தின் இரத்தினம் கிடைத்திருக்கிறது. இராமரத்னம் என்கிற தனம் கிடைத்திருக்கிறது. இந்த பக்தி தனம் விலை மதிக்கப்படாதது, என் மீது மிகுந்த அருள்கொண்டு, என் குருநாதர் இந்தச் செல்வத்தை எனக்கு அளித்திருக்கிறார், அந்தச் செல்வத்தை நான் அவரிடமிருந்து உடல், மனம் என்ற சாதன உறுப்புகளால் பெற்றுக்கொண்டேன். இந்த பொருட்குவியலைப் பெறுவதற்கு நான் ஒவ்வொரு பிறவியிலும் தேடி திரிந்தேன். உலகம் முழுவதிலும் தேடி அலைந்தேன். இந்த மகத்தான செல்வத்தை அடைந்தபின்பு இந்த வாழ்க்கையிலுள்ள எல்லாப் பொருள்களிலுமுள்ள பிரியமும் தரித்து போய்விட்டது.

இந்தச் செல்வத்தின் வேறொரு மேன்மையும் கேளும். இதைச்செல விட்டுக் கொண்டிருந்தால், இந்தச் செல்வம் அழிவடையாது. இதைத் திருடன் கவரமுடியாது. நான் தோறும் இதை பேணி வருவதால், அது விருத்தியாகிக் கொண்டு போகிறது இந்தச் 'செல்வம்' உண்மை என்ற ஓடத்தைப் போலவும், இதைப் போதித்த சத்குரு ஓர் ஓடக்காரன் போலவும் இருக்கும்போது, நான் இந்தப் பரந்த வாழ்க்கைக் கடலைத் தாண்டிவிட்டேன். மீராதேவியின் ஸ்வாமி கிரிதரநாதர், அவருடைய வசமடைந்த நான் மிகப் பெரு மகிழ்ச்சியினால் மகத்தான கிருஷ்ண பக்தர்களால் சூழப்பட்டு இந்த மதுரமான பாடலைப் பாடுகிறேன்.

---

தொகுப்பு:—ஏ. எஸ். எம்., சென்னை


அனைவருக்கும் எமது தமிழ்ப் புத்தாண்டு தின நல் வாழ்த்துக்கள்

*

**உயர்ந்த பட்டுப் புடவைகள்**

டெரீன், உல்லி, நைலாக்ஸ், புல்வாயில் சேலைகள் பல ரகம்

**சூட்டிங், ஷர்ட்டிங் பல ரகங்கள்**

நாகரீகத்தின் பிரதிபலிப்பு

எல்லாவிதமான ஜவுளிகளும் ஏராளமாக வந்துள்ளன.

*

# பி. ஆர். நாராயணசாமி அய்யர்

*494, பெரிய கடை வீதி, திருச்சி-8*

போன் : கடை, 24026 வீடு : 24641 தந்தி : BONTEX



# பக்திரத்னாவளி

## மகான் விஷ்ணுபூரி அருளியது

*மஹான்களின் பாத தூளிகளின் அனுக்ரஹம் பற்றி பிரகலாதர் கூறிய பிறகு, மஹான்களின் சேர்க்கையால் ஏற்படும் பயன் பற்றிக் கூறுகிறார்.*

தஸ்மாதமூஸ்த்னுப்ருதா—மஹமாஸிஷோ க்ரு
ஆயூ : ஸ்ரியம் வி பவ — மைந்ரியமாவிரிஞ்சாத்
நேச்சாமி தே விஒலிதானு ருவிக்ரமேண
காலாத்மனோபனயமாம் நிஜப்ருத்யாபார்ஸ்வம்
ஏவம் ஜனம் நிபதிதம் ப்ரபவாஹிக்ருபே
காமாபிகாமமனு ய : ப்ரபதன் ப்ரஸங்காத்
க்ருத்வாத்மஸாத் ஸுரர்ஷிணு பகவன் க்ருஹீத :
ஸோ அஹம் கதம்னு விஸ்ரு ஜே தவ ப்ருத்யஸேவாம்
யத்ஸங்கலப்தம் நிஜவீர்யவைபவம் தீர்த்தம்முஹு :
ஸம்ஸ்ப்ருஸதாம் ஹி மானஸம்
ஹரத்யஜோ அந்த : ஸ்ருதிபிர்கதோமலம் கம்
வை ன ஸேவேத முகுந்தவிக்ரமம் (30 - 32)

நான் அறிவதுபோல் தீங்களும் காலம் எல்லாவற்றையும் பிரம்மா தனது ஆட்சிக்குள் படைத்திருக்கும் ஜீவன்களுக்குப் புலன்களின் வழியே ஏற்படும்ஐஸ்வர்யம்,நீண்ட வாழ்வு, சித்திகள் மற்றும் எல்லா வித சுகங்கள் இவற்றையெல்லாம் நான் வேண்டவில்லை. பகவான் தமது பரம பக்தர்களிடம் என்னை அணுகும்படி அருளட்டும். ஹே! பகவான்! சம்சாரம் என்ற கிணற்றில் பிறப்பு இறப்பு என்னும் சர்ப்பங்கள் நிறைந்திருக்கின்றன.

புலன்களின் வழியே ஏற்படும் சுகத்தையே விரும்பும் மனிதர் அத்தகைய கிணற்றில்விழவேண்டியவன்தான். ஆனால், மஹாமுனியான நாரதர் என்னைத் தன்வசப்படுத்தி காப்பாற்றிவிட்டார்.

அப்படி இருக்க என் போன்றவன் உமது பக்தர்களின்சேவையை எவ்வாறு புறக்கணிக்க முடியும்? பகவானின் குணகணங்களைக் கேட்பதாலும் சொல்லுவதாலும் புனிதத் தன்மை ஏற்படுகிறது. மேலும் பக்தர்களின் சேர்க்கையோடு கூடிய

*பி. எஸ். பரமேஸ்வரன்*, பி.ஏ., பிஎல்., சென்னை

எங்களது இனிய புத்தாண்டுத் திருநாள் நல் வாழ்த்துக்கள்





பழநியம்பதியில் கலியுக வரதனுக
அவதரித்த
ஸ்ரீபழநி ஆண்டவரை தரிசிக்கும்
பக்தகோடிகள் அனைவரும்
விரும்புவது

பழநி
## S. சித்தனுதன்

ஸ்பெஷல் ஐவ்வாது
வாசனை விபூதி
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

★

*பரிமள விலாஸ்*

**S. சித்தனுதன் சன்ஸ், விபூதி ஸ்டோர்,**

அடிவாரம், பழநி-624601.

போன் : கடை 405 வீடு & ஸ்டோர் : 406


எமது இதயங்கனிந்த தமிழ்ப் புத்தாண்டு தின நல் வாழ்த்துக்கள்




அத்தகைய கேள்வி ஞானம் பக வானையே அவனது ஹ்ருதயத்தில் ஆட்கொள்ள வழிகோலுகிறது. இதனால் எல்லாவித பாவங்களும் நசிக்கின்றன. பின் யார் தான் பக வானின் விசேஷங்களைக் கேட்க விரும்பமாட்டார்?

ஸ்ரீ கிருஷ்ணர் பக்தர்களின் உயர்வைக் கூறுகிறார் ;—

அஹம் பக்த பராதீனோ ஹ்யஸ்வதந்த்ர இவ த்விஜ
ஸாதுபிர்க ஸ்தஹ்ருதயோ பக்தைர் பகத ஜனப்ரிய :
நாஹ மாத்மான மாஸாஸே மத் பக்தை ஸாதுர் பிர்விநா
ஸ்ரியம் ஸாத்யந்திகிம் ப்ரம்மன் யேஷாம் கதிரஹம் பரா
யே தாரா கார ஷுத்ராப்தான ப்ராணான்விக் தமிமம் ப்ரம்
ஹித்வாமாம் சரணம் யாதா : கதம் தாம்ஸத்ய க்ருமுஸ்த ஹே
மயி நிர்வத்த ஹ்ருதயா : ஸாதவ : ஸமதர்ஸின :
வசம் குர்வந்தி மாம் பக்த்யா ஸத்ஸ்ரிய : ஸத்பதிம் யதா :
மத்ஸே வயா ப்ரதீதம் ச ஸாலோக்யாதி சதுஷ்டயம்
னேச்சந்தி சேவ யா பூர்ண : குதோ அன்யத கால விப்லுதம்
சாதவோ ஹ்ருதயம் மஹ்யம் ஸாதுனு ஹ்ருதயம் த்வஹம்
மதன்யத்தே ன ஜானந்தி நாஹம் தேப்யோ மனாகபி (33 - 38)

இங்கு ஸ்ரீ கிருஷ்ணர் பக்தியின் முக்யத்துவம் பற்றி விவரிக்கின்றார். பகவானும் பக்தனும் ஒன்றே என்பது அவர் துணிபு.

ஹே துர்வாஸரே! நான் பக்தர்களைச் சார்ந்தவன். அவர்களை விட்டுத் தனிப்பட்டவனல்ல பக்தர்கள் எனக்கு அன்பர்கள். என் ஹ்ருதயம் அவர்களையே அண்டுகிறது. நான் என்னை அதிகமாக மதிப்பிடுவதில்லை. ஏன், என்னையே அண்டி நிற்கும்ஸ்ரீதேவியையும் உயர்வாக நினைப்பதில்லை. ஏனெனில், இயல்பாகவே என் மனம் புண்ய ஸ்லோகர்களான என் பரமபக்தர்களையேமதிக்கிறது. அத்தகைய பக்தர்கள் என்னையே அவர்களது உயரிய லட்சியமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். இத்தகைய மனிதரை நான் எவ்வாறு புறக்கணிக்க முடியும்? அவர்கள் என்னையே சரணடைந்துள்ளனர். தமது மனைவி, புத்திரர், சொந்தம், சொத்து, தனம், ஏன்? உயிரையும் கூட எனக்காகப் புறக்கணித்துள்ளனர். தூய்மையான பக்தர்கள் என்னிடம் ஆழ்ந்த அன்பு கொண்டவர்கள் அவர்கள் எல்லா உயிர்களிடத்தும் காருண்யம் உடையவர் அத்தகைய பக்தர்கள் என்னை விசுவாசமுடைய மனைவி தன் கணவனைக் கவர்வதுபோல் கவர்ந்து விடுவர்.

என்னுடைய சேவையிலேயே வாழ்க்கையின் முழுமையைப்பெற்ற என் பக்தர்கள் சாலோக்யம் போன்றுள்ள முக்தி நிலைகளையோ, மற்றவற்றையோ விரும்பார் அத்தகையோர் அழியும் மற்ற எத்தப் பொருளையும் விரும்புவரோ? என் பரம பக்தர்களே என் ஹ்ருதயமாவர். நானே அவர்களின் ஹ்ருதயத்தை ஆட்கொண்டவன். அவர்கள் என்னைத் தவிர ஒன்றையும் அறிவதில்லை நானும் அவர்களைத் தவிர ஒன்றையும் அறியேன்.

ஸ்ரீ கிருஷ்ணர் அக்ரூரருக்கு பக்தர்களின் திருக்கூட்டத்தைப் பற்றிக் கூறல் :

பவத்விதா மஹாபாகா நிஷேவ்ய அர்ஹ சப்தமா
ஸ்ரேயஸ் காமைர் நிர்பிர் நித்யம் தேவா ஸ்வார்தா: ந ஸாதவ :(39)

ஆத்மீக முன்னேற்றத்தை வேண்டும் மனிதர்கள் உம்மைப் போன்ற வணக்கத்திற்குரிய பக்தர்களை அண்ட வேண்டும். தெய்வங்கள் கூட தன்னலம் கருதிச் செயல்படுவர். ஆனால் பரம பாகவதர்கள் அத்தகைய நிலையை ஏற்பதில்லை. அவர்கள் தன்னலமற்றே செயல்படுவர். ஆகவே அத்தகைய பக்தர்களை அணுகுவது முறை என்பது ஸ்ரீ கிருஷ்ணரின் கூற்று.

ராஜரிஷியாகிய முசுகுந்தன் சத்சங்கத்தைப் பற்றி உரைத்தல்.

பவா பவர்கோ பிரமதோ யதா
பவேஜ்ஜனஸ்ய தர்ஹ்யச்சுதசத்சமா கம:
ஸத்ஸங்கமோ யர்ஹி ததைவ ஸத்கதௌ
பராவரேசே த்வயி ஜாயதே மதி. (40)

ஓ கிருஷ்ணா! உனது மாயையால் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். தான் ஏதேச்சையாக பற்று அறுந்த நிலை பெற்றேன் சம்சாரத்திலிருந்து ஒருவனுக்கு விடுதலை பெறும் நிலை ஏற்படும்பொழுது. அவனுக்கு சாது ஜனங்களின் சேர்க்கை உண்டாகிறது. இத்தகைய சாதுக்களின் சங்கத்தினால் அவன் மனம் உன்னை அடைய அவாவுறுகிறது. நீயே மஹான்களின் மோக்ஷ சாதனம். எல்லா உலகங்களுக்கும் காரணபூதம்.

(தொடரும்)

அனைவருக்கும் எமது மனங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்





# ஸ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதம்

(ஸ்ரீ. லீலாசுகர் அருளியது)

கோபிகள் விவரித்த கண்ணனை தரிசிக்க எண்ணின லீலாசுகர் தன் தாபத்தை முன் சுலோகத்தில் எடுத்துரைத்தார்.

மயிப்ரிஸாதம் மதுரை: கடாக்ஷை:
வம்சினி நாதானு சுரைர்விதேஹி
த்வயி பிரசன்னே கிமிஹா பரைர்ண
ஸ்த்வர்ய பிரசன்னே கிமிஹாபரைர்ண: 29

ஹே கிருஷ்ணு! எல்லாவற்றிற்கும் காரணமாயிருக்கும் நீ, சர்வரக்ஷகனுன நீ, சர்வாந்தர்யாமி யான நீ, சகல புருஷார்த்தங்களையும் அளிக்கக் கூடியவன் நீ, உன்னுலேயே எல்லா புருஷார்த்தங்களையும் அடைய முடியும். அப்படியிருக்க உன்னுலே சிருஷ்டிக்கப்பட்டு உன்னருளாலே சக்தி பெற்றவர்கள் உன் நிலையை அறியாது தங்களையே பரதேவதையாக நினைத்துத்திரிகின்றனர். அவர்கள் சர்வாந்தர்யாமி ஆன உன்னை அறியாது இருப்பதால் அவர்களை அண்டி என்னபயன்பெறமுடியும்? ஆகவே, அவர்களிடம் என்னைத் தள்ளிவிடலாகாது. உன் குழல் ஓசை புகுந்த இடமெல்லாம்எப்படிபரவசம் உண்டாகிறதோ, அவ்விதமே உனது கடாக்ஷத்தையும் செலுத்தி என் போன்றவர்களுக்கு அருள்வாய் என்று கேட்டுக் கொள்கிருர் லீலாசுகர்.

நிபத்ய முத்யாஞ்சலிரேஷ யாசே-நீரத்யதைன்யோன்னதமுக்தகண்டம்
தயாம் பூதே தேவ பவத்கடாக்ஷ-தாக்ஷிண்ய லேசேந் சக்ருன்னிஷிஞ்ச 30

சம்சாரம் என்னும் கடலில் வருந்தித் தத்தளிக்கும் என் போன்றவரைப் பெருந்துன்பத்தில் இன்னும் விட்டு வைத்திருப்பது சரியல்ல. அது பொறுக்க முடியாமலும், ஏது செய்வதென்று அறியாமலும், வாய் விட்டுக்கதறி அனைத்துப் பிழையும் பொறுத்து அருளவேண்டி இருகை கூப்பிப் பல் காட்டி உன்னைப் பணிகிறேன்.

நீயோ தயாளகுணத்திற்குஇருப்பிடம் என்றுசொல்லுவர். என்துயர் காணப்பொறுப்பவன் அல்ல, அப்படியிருக்க துர்க்கதிஅடைந்துள்ள என்னை, இடைவிடாத மனசஞ்சலம்கொண்டவனுன என்னை,இன்

பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ.,பி.எல்., சென்னை

றும் வருத்திவிடுவது ஏனோ? அப்படி வருத்தாமல் உன் கிருபா கடாக்ஷம் ஒரு சிறுதுளி என்மேல் விழச் செய்து இந்த வெப்பமெல்லாம் மாற்றும் சிறுபனித் துளியாக என்மீது தெளித்து என்னைக் காப்பாற்று! என்பது அவர் வேண்டுகோள்.

பிஞ்சா வதம் சரசனோசித கேச பாசே!
பீனஸ்தனீ நயன பங்கஜ பூஜனீயே
சந்ராரவிந்த விஜயோத்ய தவக்த பிம்பே
சாபல்ய மேதி நயனம் தவ சைசவேந: 31

மயில் பீலியைக்கட்டி அழகுறச் செய்யும் வண்ணம் பின்னப்பட்ட கூந்தலையும், உலகில் அழகுகளுக்கெல்லாம் உவமையாகக் கூறப்படும் சந்திரனையும், தாமரைப் பூவையும் வெல்லும் முகத்தோற்றம் உடையவனும், யுவதிகள் யாவரும் வைத்த கண்வாங்காது நிலையை ஏற்படுத்தும் உன் இளம்பருவ சௌந்தர்யத்தையும் என் கண்ணால் எப்போது காண்பேன் என்று சொல்கிறார் லீலாசுகர் கண்ணனை நோக்கி.

த்வஸ்சைச்சலம் திரிபுவனாற்புத மித்யவைமீ
யஸ்ச்சா பலஞ்ச மம வாக்விவாத கம்யம்
தத் கிம் கரோமி விரணன் முரளீவிலாசம்
முத்கம் முகாம்புஜ முதீக்ஷீத் மீக்ஷணப்யாம் 32

கண்ணா! உன் மழலைப்பருவம் சகல உலகங்களிலும் ஆச்சர்யப் படத்தக்கது. இதனைப் போன்று மற்றோர் ஆச்சர்யமான வஸ்து எங்கும் காணக்கிட்டாது என்பதை நான் அறிவேன். அதனாலேதான் உனது குழந்தை உருவைக் காண வேண்டும் என்ற பேராசை என்னுள்ளே வளர்கின்றது. என்வாக்குகள் உன்னை இடைவிடாது துதிக்கிறது. என் கண்களும் உன் குழல் ஊதும் முகப்பொலிவைக் காண அவாகொண்டு துடிக்கின்றது. இத்தகைய பேறுநான் அடைய என்ன உபாயம் என்பதை நீயே உரைப்பாய். என்கிறார் லீலாசுகர்,



# உங்கள் பக்கம்

சென்ற இதழ் பஞ்ச ஸ்தலங்களில் ஒன்றான வாயு லிங்கம் காளத்தி நாதன் தரிசனம் சிவராத்திரி புனித தின நினைவாக அமைந்தது. அட்டை படம் மிகவும் நேர்த்தியாக இருந்தது. ஜானகி-நாதன்—கோவை.

நாட்டுக்கு தற்சமயம் மிக மிகத் தேவை நல்ல தலைவர்கள். தலையங்கம் நல்ல முறையில் எழுதியுள்ளீர்கள். சுயநல அரசியல்வாதிகளாகத்தான் உள்ளார்கள். நாட்டு நல வாதிகள் யாரையுமே காண வில்லையே? தாங்கள் கூறிவருவதுபோல் ஆண்டவன்தான காப்பாற்ற வேண்டும். ராமநாதப் பிள்ளை—நெல்லை.

காளஹஸ்தி தரிசனம் நேயர்களுக்கு நல்ல விருந்து. மிகவும் நல்ல முறையில் நேரில் பார்ப்பதுபோல் உள்ளது, தங்கள் கட்டுரை. எனது அன்பு பாராட்டுக்கள். வாஸந்தி-ராஜன்—திருச்சி

முற்றத்து முல்லை, நல்ல அறிவு விளக்கக் கட்டுரை, நலல முறையில் விளக்கியுள்ள நாராயணரைப் பாராட்டுகிறேன். ராமஜெயம்—சேலம்.

குலசேகர அமுதம், ஆன்மீகத்திலும் எப்படி-நகைச்சுவையை சேர்க்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது குலசேகர ஆழ்வாரின் அறிவுரை. நல்ல பலனுள்ள கட்டுரை.

வேலுமணி அம்மாள்—சேலம்

வேதம் ஒலிக்கட்டும். குடந்தை V. R. L. சர்மா அவர்களின் புனிதமான சேவையைப் பாராட்டுகிறேன் தாராளமான | தர்மசிந்தனை கொண்ட தனவந்தர்கள் ஏராளமாக உள்ள காலம் இது. இதுமாதிரி உலக க்ஷேமத்திற்கு அவசியமான சத் காரியங்களுக்கு வாரி வழங்கலாமல்லவா? தனமும் ஈகை மனமும் உள்ளவர்கள் சிந்திக்கட்டும்

சிவானந்த அடிகளார்—திருவண்ணாமலை.

ஆன்மீக உலகில், மெய்யன்பர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக உள்ளது. 'குண்டுசி'யின் புனிதசேவை. பெரியவாள் அருளுடனும், தங்கள் உள்ளத் தெய்வம் கந்தப் பெருமான் துணையுடன் தொடரட்டும். என் அன்பு ஆசிகள். ஷண்முகநாதனழகன்—பழனி

தங்க, வைர நகைகளுக்கு
K.R.& சன்ஸ் ஜுவல்லரி
பெரியகடை வீதி, கோயமுத்தூர், Ph: 23633

தமிழ்ப் புத்தாண்டு நன்னாளில் எமது அன்பு வாழ்த்துக்கள்

# கோபால் பல்பொடி




பாக்கெட் விலை 45 காசு

# ஜெட் பல்பொடி




பாக்கெட் விலை 20 காசு



# பாபா சொன்ன கதைகள்

## 12

### சர்வேஸ்வரனே சகலத்திற்கும் கர்த்தா

ஸ்ரீ பகவான் சூரிய சந்திரர்களையும், நட்சத்திரங்களையும் ஏற்படச் செய்தார். அவர் விநோதத்தின் பொருட்டு இந்த விசாலமான பிரபஞ்சத்தை, மிக சுந்தரமாகவும், அழகாகவும் சிருஷ்டித்துக் கொண்டார். சகல சக்தியுடன் கூடிய அந்த பகவானே நமக்கு தாய் தந்தை சகலமும் அவரே. நாம் அவருடைய குழந்தைகள்.

நாம் ஆர்வத்துடனும், உள்ளன்புடன் கூடிய விஸ்வாசத்துடன் அவரை ஆராதித்தால், அவர் பிரசன்னமாவார். நம் மன வேதனைகளை விளக்கம் செய்துகொண்டு, நமக்கு தேவையானதை பிரசாதிக்கிறார். ஆனால், நம் கோரிக்கை, களங்கமில்லாமலும், நியாயமாகவும் இருக்க வேண்டும். அப்படியில்லாவிடில் நாம் அவருக்கு அப்பாற்பட்டவர்களாவோம்.

மோஹர் என்னும் கிராமத்தில் சாம்பன் என்பவன் செருப்பு தைத்து விற்று வாழ்ந்து வந்தான். அவன் உண்மையும் நேர்மையான பக்தி உள்ளமும் கொண்டவன். சாம்பன் என்னும் பெயரை சுற்று வட்டார கிராமங்களில் பலரும் பேசுவார்கள். அவன் நாள்பூராவும் பழைய செருப்புகளை சரி செய்தும், புதியவற்றைத் தைத்தும், அதனால் கிடைத்த ஊதியத்தினால் தன்குடும்பத்தையே காப்பாற்றி வந்தான்.

மோஹர் கிராமம் மற்றும் சுற்று வட்டாரமாக இருந்த சுமார் 20 கிராமங்களுக்கும் ஓர் ஜமீன்தார் இருந்தார். அவர் ஒரு நாள் சாம்பனின் குடிசைக்கு சமீபமாய் ஓர் உயர்ரக குதிரையின் பேரில் சவாரி செய்துகொண்டு செல்வதை சாம்பன் பார்த்தான். அவர் அணிந்திருந்த விலையுயர்ந்த ஆடைகளையும் கம்பீரத்தையும் பார்த்து யாரோ ஒரு மகாராஜா என எண்ணினான். மறுபடி அக்கம்பக்கத்தார்களின் மூலம் அவர் தன் கிராமத்திற்கு அதிபதியான ஜமீந்தார் என்பதை அறிந்தான். உடனே அவருடைய அந்தஸ்து, அவருடைய செல்வம் முதலியவற்றை எண்ணி, அவருடைய வாழ்க்கையோ, ஓர் ஆனந்த சாகரமானது – நானோ கூரை குடிசையில் - கால மெல்லாம் தோலை அறுத்து செருப்புகளைத் தைத்துக் கொண்டு நிர்பாக்யமாய் வாழ்க்கையை கடத்தி வருகிறேன். அந்த பகவானுக்கு என் பேரில், ஏன் தயை ஏற்படவில்லை? என சஞ்சலப் பட்டான்.

சாம்பன் பற்பல ஆலோசனைகளுடன், அவனுடைய கண்கள் சுவற்றின் குடிசைக்குள் மாட்டப் பட்டிருந்த பண்டரீபுர பாண்டுரங்கனின் படத்தைப் பார்த்து, நிர்மலமான உள்ளத்துடன் அந்தப் பிரபுவின் படத்திற்கு முன் நின்று,

ஹோ! பகவான், நீயே எனக்குஉற்ற துணை, என் தாய் தந்தை யாவும் நீயே, நான் படும்பாடு உனக்குத் தெரியாதா? என் பேரில் கருணை யில்லையா? என்னைக் காப்பாற்ற மாட்டாயா? எனக்கு ஓர் பெரிய வீடு, நல்ல நிலம், எனக்கு, என் மனைவி,என் குழந்தைகளுக்கு நல்ல துணிமணிகள் கட்டிக்கொள்ளவும் அனுக்ரகிக்கக்கூடாதா? என பிரார்த்தித்தான்,

அப்போது சாம்பன் கண்களுக்கு அந்தப் படத்திலிருந்து பாண்டுரங்கன் தன்னைப் பார்த்துசிரிப்பதை போல் உணர்ந்தான். உடனே பகவான் தன் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு விட்டார் என ஆனந்தப் பட்டான். மறுபடி - என்னைப் பார்த்து ஏன் சிரித்தார்? "நான்" அதிக ஆசைப்பட்டு, அதிகமாய் கோரினேனா? என தனக்குள் கேள்வியைக்கேட்டுக்கொண்டான்

அன்றைய இரவே பகவான் பாண்டுரங்கன் ஜமீன்தாரின் கனவில் மோஹர் கிராமத்தில் வசிக்கும் செருப்பு தைக்கும் சாம்பனுக்கு ஓர் பெரிய வீடும், ஓர் பெட்டி நிறைய தங்க நாணயங்களும், மறு படி நான்கு ஏகரா நிலமும், அவனுக்குப் பட்டயம் செய்துகொடு, உனக்கு என் அனுக்ரகம் தவறாமல் கைகூடும் என கூறி மறைந்தார்.

பாண்டுரங்கப் பிரபுவின் ஆணையின் பிரகாரம் அந்த ஜமீன்தார் - சாம்பனுக்கு-சகலத்தையும்ஏற்பாடு செய்தார். சாம்பன் தன்னுடைய அதிர்ஷ்டத்திற்கு ஆச்சர்யப்பட்டு தன்னைத்தான் நம்பவில்லை. தன்னுடைய குடும்பம், தனக்கு கைகூடிய நிலத்தில் வேலை செய்து நிலத்தை உழுது, விதைகளை நட்டு, கஷடப்பட்டு பயனை அடைந்து. யாவும் தனக்கு பகவான், அனுக்கித்ததற்குஆனந்தப்பட்டுக்கொண்டிருந்தான்.

ஆனால், சாம்பனுக்குக் கஷ்ட காலம் ஆரம்பமாயிற்று, தன் சுக வாழ்க்கையைப் பார்த்த-தன்சுற்றத்தார், பலரும் தன் பெரிய வீட்டில் தங்க வந்துவிட்டனர். வந்தவர்களோ, சிறு சிறுவிஷயங்களுக்கெல்லாம் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்ளலாயினர். ஜமீன்தாரால் கொடுக்கப்பட்ட தங்க

அனைவருக்கும் எமது மனங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்



நாணயப்பெட்டியை எங்கு ஒளித்து வைத்து காப்பாற்றுவது என்பதே, சாம்பனுக்கு பெரிய வேதனையாகி விட்டது. ஒருநாள் நடுநிசியில் அந்த தங்க நாணயப்பெட்டியை தன்னுடைய நிலத்திலோர் மூலையில் குழியை தோண்டி புதைத்து வைத்தான். ஆயினும் அதைத்திருடர் கொண்டு போய்விடுவார்களோ என்ற பயம், இது அவனுடைய மனதை ஒவ்வொருசெகண்டும்வாட்டிவதைத்து கொண்டே இருந்தது. மறுபடி தன் நிலத்தில் பயிர்செய்தவேளாண்மை தனக்கு சரியானபடி விளைந்து கை கூடுமா என்ற கவலை அதற்குத் தகுந்தபிரகாரம் மழையும் இல்லாத திஞல் வேதனைப்பட்டான்.

சாம்பனுக்குசாந்தி, என்பது சிறுக சிறிதுகுறைவதையும்தன் ஆனந்தம் மன நிம்மதி இல்லாமல் தன்வாழ்க்கையேகசப்பதையும் விசாரத்திஞல் நாளுக்குநாள் உடல் இளைப்பதையும் உணர்ந்தான்.

சாம்பன்தான்செய்ததப்பிதத்தை தெரிந்துகொண்டான். ஓர் நாள் பாண்டுரங்கன் படத்திற்கு முன் கண்ணீருடன்நின்று ஹே! பகவான் அன்று இந்த யோக பாக்யங்களைப் பற்றி உன்னைக் கோரும்போது நீ அன்று ஏன்சிரித்தாய்?" என்பது இப்போது எனக்கு விளங்கி விட்டது. அவைகள் எனக்குசுகத்தையோ, சந்தோஷத்தையோ கொடுக்கவில்லை உண்மையில் எனக்குள் சாந்தியும் போதுமென்ற மனமும் நிம்மதியான தூக்கமும்மாயமாய் விட்டது. நான் செய்ததப்பிதத்தை மன்னித்து என சுயநல எண்ணத்தையும் அதிக ஆசையையும்என்னை விட்டு விலகச் செய்து, பழைய பிரகாரம் என் உடல் பிரயாசையுடன் நீதியுடன் வாழும் என் பழைய வாழ்க்கையையே என கருளவேணும், என்னைப் போன்ற மானிடர்களுக்கு சேவை செய்து அவர்களுக்குசெருப்புகளைதைத்துக் கொடுத்துவாழ அனுக்ரகிக்கவேண்டும் பிரபு! எனபிரார்த்தித்தான்.

மறுபடியும் என்உள்ளத்தில்பவித்ரமான அன்பையும் பக்தியையும் நிறையச் செய். இன்று முதல் என் கடமையைச் செய்து மற்றவற்றை உன் அனுக்ரஹத்திற்கு விட்டுவிட்டேன். எனக்கு என் குடும்பத்திற்கு தேவையானது, எதுவோ அதை அருளி தேவையில்லாததை நீயே விலக்கிஉன் குழந்தைகளாகிய எங்களுக்கு எது உசிதமோ அதையே அனுக்ரஹம் செய் என பிரார்த்தித்தான்.

தொகுப்பு : R. பாலபட்டாபி
உடுமலைப்பேட்டை


குடும்பத்திறகு தேவையான எல்லாவித எவர்சில்வர், பித்தளைப் பாத்திரஙகள் பிரஸ்டீஜ் குக்கர், முதலிய சாமான்கள் யாவும் நம்பிக்கையான விலையில் எங்களிடம் கிடைக்கும்

மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

**எல். ராமசாமி நாடார் & பிரதர்**

49, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

காட்சி சாலைகள் :

22, பைக்ராப்ட்ஸ் சாலை, சென்னை-5.

5, ராமகிருஷ்ண மடம் சாலை, (லஸ்) சென்னை-4

தொழிற்சாலை :

38. V. R. பிள்ளை தெரு. சென்னை-5.

பெண்களுக்கு மட்டும்

# நக்ஷத்திர குணங்கள்

A. ராகவய்ய ஜோஸ்யர் - திருவள்ளூர்

## ரோகிணி

இருபத்தேழு நக்ஷத்திரங்களில் நான்காவது இடம் பெற்றது ரோகிணி நக்ஷத்திரம். இந்த நக்ஷத்திரம் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அவதரித்தது. அக்ரமத்தையே அடிப்படையாகக் கொண்ட கம்சனை வதைத்து, உலகத்தையே ரக்ஷித்த மகாபுருஷனுடைய நக்ஷத்திரமான ரோகிணியில் பிறந்த பெண்களைப் பற்றி இங்கு நோக்குவோம்.

இந்த நக்ஷத்திரத்தின் அதிபதி சந்திரன், தெய்வம் நான்முகன், யோனி பாம்பு, ஸ்ரீரூபம், மானுஷ கணம். இத்தகைய நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்கள் அதிரூப சுந்தரிகள். ரதி தேவியை ஒத்த அழகுடையவர். பொன்நிற மேனி, முத்துப் போல் பல்வரிசை, சிவந்த உதடுகள், மலர்ந்த முகம், நடுத்தர உயரம் அமையப் பெற்றவர்கள். சகல கலா வல்லவர்கள். அனைத்து பாஷைகளையும் அறிந்தவர்கள். இனிமையான சொல்லை பேசுபவர்கள். பிறரை மயக்கும் தன்மை பெற்றவர்கள். தெய்வ நம்பிக்கை உள்ளவர்கள். தாய் தந்தை மீது பக்தி.

இவர்களுக்கு நெஞ்சுவலிகள், ரத்த ஓட்டக் குறைவு, சளிகள் போன்ற பிணிகளால் அடிக்கடி துன்பப்படுவார்கள். தாய் தந்தைகளை தன்வசம் வைத்து காப்பாற்றுபவள். அதிக ஐஸ்வர்யத்தைஅடைபவள்.

### முதல் பாதம்

இவர்கள் பார்ப்பதற்கு சிகப்பு நிறம், கடுகடுப்பான முகம், வாக்கு சத்யம், உண்மை பேசுபவர்கள், சிகப்பு ஆடைகள் மீது அதிக பிரியம் உள்ளவர்கள், உடன் பிறந்தவர்கள் ஜன்ம விரோதிகளைப்போன்றவைகளை அமையப் பெற்றவர்கள். இவர்கள் கணவன் இவர்களுக்குக் கட்டுபடுபவர்கள், வெளியிடத்தில் கௌரவ வாதிகளாக இருந்தாலும், இவர்களுக்குத் தாஸானுதாஸனாக இருப்பார்கள். இவர்கள் போட்ட கோட்டைவிட்டு தாண்டமாட்டார்கள், 25 வயது முதல் 42 வயது வரை கஷ்டத்தை அனுபவிப்பார்கள்.

### இரண்டாம் பாதம்

இவர்கள் அழகு, பணிவு, அடக்கம், வெண்ணிற ஆடைகள் மீது ப்ரியம், முத்தாபரணத்தின் மீது ஆசை, தெய்வபக்தி போன்றவற்றைப் பெற்றிருப்பர். புளிப்புச் சுவை மீது அதிக ஆசை உள்ளவர்கள். தந்திரசாலிகள். இவர்களுக்கு அமையும் கணவன் ஊதாரி செல்வு செய்பவன், தீயவர்கள் சிநேகத்தால் பணிபுரியும் சம்பளத்தையும் இவர்களிடம் தராமல் இருப்பாரகள் கணவனின் தொல்லை தாங்காமல் இவர்கள் பணிபுரியச் செல்வர்கள். தன் கஷடத்தைம் பிறரிடம் கூற மாட்டார்கள். எதிலும் நிதானத்தை கடைபிடிப்பவர்கள். ஜனனமான முதல் தாய் தந்தையரிடம்சுகத்தை அடைவார். கணவனிடம் மிகவும்

கவலை அடைவர். சந்ததிகளால் சுகங்களை அடைபவர்கள்.

## மூன்றாம் பாதம்

இவர்கள் மாநிறம், குட்டையான சரீரம், பார்ப்பதற்கு கம்பீரமான தோற்றம், முகத்தில் திலகம்போன்ற மச்சம் போன்றவை பெற்றிருப்பார்கள். மத்யதரமான கல்வி உடையவர். பத்திரிக்கை ஆசிரியர்கள் ஆக இருக்க விரும்புபவர்கள். பத்திரிகை சாஸனத்தை நடத்தும் திறமையுள்ளவர்கள். பல காலம் திருமணம் வேண்டாம் என கூறிக்கொண்டு வந்து காதல் திருமணம் செய்து கொள்வார்கள். இவர்கள் கணவன் பல மாதர்கள் தொடர்பால் நிலை தவறி இவர்களுக்குத் துன்பத்தையே தருவர்.

## நான்காம் பாதம்

இவர்கள் சஞ்சல மனம், சிகப்பு நிறம், தாய் தந்தை பக்தி, ஜல சம்பந்த ஆராய்ச்சிகளில் தேர்வு, கலகல்ப்பு, உல்லாச வாழ்க்கையை அனுபவிப்பார்கள். மனோ ராஜ்யங்கள் போன்றவைகளைப் பெற்றிருப்பர். மனோதத்துவம் படித்தவர்களாக இருப்பர்.

இவர்களுக்கு வாய்க்கும்கணவன் நல்ல அழகு, ரசாயன ஆராய்ச்சிகளில் விருப்பமுடையவர், இவர்கள் திருமணம் நிமிடத்தில் முடிவடையும் கடல் கடந்து செல்லும் பிரயாணங்கள் அவ்வப்போது ஏற்படும். இவர்கள் வாழ்க்கை வள்ளுவர் வாசுகி போன்றதுதான். கணவனிடம் அதிக பாசமும், பயமும் உள்ளவர்கள்.

இந்த நக்ஷத்திரத்தில் ஜனித்த பெண்களுக்கு ஞாயிறு, திங்கள், புதன் கிழமைகளும், 5, 14, 23 தேதிகளும் 14, 23, 32, 41, 50 வயதுகளும் வாழ்க்கையில் விசேஷ யோகங்கள் தரக் கூடியவை. சூரிய மகாதசை, புதன் மகாதசை, சனி மகாதசை போன்றதசாகாலங்களில் கணவன் மனைவிக்கு எதிர்பாராத உயர்வுகளும், வாகன பூமி லாபங்களும் உண்டாகும். சந்திரதசை, செவ்வாய்தசைகளில் இக்கட்டான வாழ்க்கை, கணவன், தாய் தந்தைக்கு கவலைகள் உண்டாகும். குருமகாதசையில் உடல் அசௌகரியங்களும், பிரயாண இடையூறுகளும் உண்டாகும்.

தடைகளுக்கு துர்காஜபம், தக்ஷிணாமூர்த்திக்கு அருக்கன், மேதாகாக்தபாராயணங்களால் சகலவித க்ஷேமங்களை அடைவார்கள்.

அனைவருக்கும் எங்களது மனங்கனிந்த புத்தாண்டு நலவாழ்த்துக்கள்



எல்லோருக்கும் எமது புத்தாண்டு தின நல் வாழ்த்துக்கள்

தங்க மெடல் பரிசு பெற்றது!   காரம். மணம் கமழும்

**பி. வி. ராஜன் அண் கம்பெனி**

உயர்ந்த பட்டணம் பொடி

★

**ஆர். எஸ். சுகந்த மூக்குத்தூள்**

உபயோகியுங்கள்

அரக்கோணம் — மதருஸ்

ஸ்தாபிதம் : 1920

மற்ற பொடி தினுசுகளுக்கும், விபரங்களுக்கும் எழுதவும்

அல்லிக்கேணியில் அதிசயக் காட்சிசாலை

✻

உங்கள் குடும்பங்களுக்கும், கல்யாணம் மற்றும்
விசேஷ வைபவங்களுக்கும் தேவையான எல்லாவித அவசியப்
பொருள்கள் எப்பொழுதும் உங்களுக்கு திருப்தியளிக்கும்
வகையில் நம்பகமான, நியாய விலையில் கிடைக்கும்

ரொக்க விலைக்கும், சுலபமான தவணை முறையிலும் தருகிறோம்

எவர்சில்வர் பாத்திரவகைகள், பிரிஸ்டிஜ் குக்கர் மற்றும் பலவிதமான குக்கர்கள்
கிரைண்டிங் மிஷன் முதலிய உங்கள் வீட்டிற்கு தேவையான யாவும்
நம்பிக்கையுடன் வாங்க சிறந்த இடம்

மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

**தமிழ்நாடு பாத்திரக் கடை**

120, பெரிய தெரு — திருவல்லிக்கேணி, சென்னை-5.

எமது சார்பு ஸ்தாபனம் :—தமிழ்நாடு டிரேடிங் செண்டர், கல்பாக்கம்.

# நாடகமே உலகம்

மனமென்னும் மாடு அடங்கில் தாண்டவக்கோனே—முத்தி
வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக்கோனே !

சினமென்னும் பாம்பு இறந்தால் தாண்டவககோனே!—பாவுஞ்
சித்தியென்றே நினையேடா தாண்டவக்கோனே !

ஓசையுள் அடங்குமுன்னம் தாண்டவக்கோனே!—இந்த
ஓங்காரங் கண்டறி நீ தாண்டவக்கோனே !


—தாண்டவராயக் கோனார்.

மனிதனுடைய மனம் தெளிவாக இருக்கவேண்டும். சஞ்சலங்களால் அலைகழிக்கப்படாமல் பகவானையே பக்தி செய்துகொண்டுமுக்திக்குவழி தேடுபவன் புத்திசாலியாவான். இந்தமனத்தை பஞ்சேந்திரியங்கள் எங்கெல்லாமோ அழைத்துச் செல்கிறது. எதையெல்லாமோ எண்ணச் செய்கிறது. எதையெல்லாமோ செய்யச்சொல்கிறது எதைச்செய்ய வேண்டுமோ அதைச் செய்யவிடாமல்எதைசெய்யக் கூடாதோ அதை செய்யச்சொல்கிறது.

அதனால்தான் மனதை அடக்கு, ஆசையை அடக்கு, சினத்தை அடக்கு, என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். மனதை ஒருநிலைப்படுத்தி பகவானையே நினைக்கச்செய் ஆசையென்பதுமேன் மேலும் வளரக்கூடியது ஒன்றுகிடைத்தால் மேலும் மேலும் ஏதாவதுகிடைக்க வேண்டுமென்று தோன்றும். அதிலிருந்து பேராசை உண்டாகிறது. பேராசை வளர வளர விரோதம் பொறாமை, வஞ்சம், பொய், கொள்ளை, கொலை இப்படி வரிசையாக கொடியசெயல்கள் விருத்தியாகி, இவனுடைய ஜென்மாவையே பாழாக்குகிறது. அதேபோல கோபம் மனிதனை நாசமாக்கிவிடுகிறது.

ஆறுவது சினம் என்றார்கள். கோபத்தை அடக்க சாந்தமாகவே பேசுவதுரொம்பவும் நல்லது என்கிறார்கள், ஆத்திரக்காரனுக்குபுத்தி மட்டு என்று சொல்லக் கேட்டிருக்கிறோமல்லவா? இதெல்லாம் அனுபவத்தின் மூலமாக ஏற்பட்ட சொற்கள். வார்த்தைகள், இப்படி சுகமாக கழியவும், பகவானை நினைக்கவும் முக்திபெறவும் பல வழிகளை நமக்கு மகான்களும் பெரியோர்களும் சொல்லியிருக்கும்போது, ஆணவம், அகங்காரம், குராதம் இவைகளை கடைபிடித்துநம்மையும் கெடுத்துக் கொண்டு பிறரையும் கெடுத்துக் கொண்டு வாழ்க்கையைநரகமாக்கி

வைரம் - ராஜகோபால்



கொண்டிருப்பதில் மனிதப் பிறவி வீணாகிறதல்லவா? இப்படிப் பட்டவர்களைத் திருத்தி நல்வழிப் படுத்த வேண்டுமென்று மகான்கள் நினைக்கிறார்கள், அதற்காகப் பாடுபடுகிறார்கள்,

முக்தி நெறி அறியாத மூர்க்க
ரொடு முயல்வோனை...

என்று பாடியுள்ளார்கள். பகவான் எல்லா சுகபோகங்களையும் கொடுத்திருக்கிறான். அனுபவிக்கும்சாதனங்களையும் ஏற்படுத்தியிருக்கிறான். இவைகளையெல்லாம் அனுபவித்துக் கொண்டேயிரு. ஆனால்என்னையும் நினைத்துக்கொள். இந்த உலக இன்பத்திலேயே ஆழ்ந்து விடாதே, என்னை மறந்து விடாதே என்றெல்லாம் சொல்லியிருக்கிறான். ஈஸ்வரனால் கொடுக்கப்பட்டது ஐச்வர்யம். இதை அனுபவிக்கத்தான் நமக்கு உரிமை உண்டு. மற்றபடி எல்லாமே அவனுடையது. நம்முடையது எதுவுமில்லை. அவன் விரும்புகிற காலம் வரையில்நாம்அவைகளை அனுபவிக்கிறோம். அவன் விரும்பும்போது இவை எல்லாம் போய் விடுகிறது. கிடைத்தபோது மகிழ்ச்சி, போய் விட்டபோது துக்கம், இரண்டுமே அவன் செயல் என்ற எண்ணம்ஏற்பட்டுவிட்டால் இரண்டும் சமமாகி விடும். ரொம்பவும் சந்தோஷப்படவும்வேண்டாம். ரொம்பவும் துக்கப் படவும்வேண்டாம். எல்லாம் மனம் தான் காரணம்.

ஆகவே, நம்மனதை ஆண்டவன் திருவடியில் இருத்திப் போற்றி வந்தால், அவன் அருள்படி நமக்கு நிச்சயம் அமைதியும், மகிழ்ச்சியும் கிடைக்கும்.


## இருமல் நோயாளிகள் கவனிக்கவும்



இருமலா? இளைப்பா? தும்மலா?
பித்தத்தினால் ஏற்படும் மயக்கம், இருதயம் படபடப்பு, நெஞ்சு வலி - பிடரி வலி - உடல் வலி – மலச்சிக்கல்- பசி மந்தம், ருசியின்மை–அடிக்கடி ஜலதோஷம்-ஓயா தும்மல் - நீர்வடிதல் தலைபாரம் – இருமல் - கோழைக் கட்டு - மேல் மூச்சு - இளைப்பு கர்முர்றென்று இழுப்பு - உடல் பலஹீனம் - உடம்பு தேறாமை அசதி – சோர்வு- களைப்பு - ஆஸ்துமாவின் ஆரம்ப நிலை

இவைகளிலிருந்து நிவாரணம் பெற, ஆரோக்கியம் பெற உங்களுக்கு பெரிதும் பயனளிக்கிறது

'சிவராஜ்' நெல்லிக்காய் லேகியம்

பவள சத்து, சிலா சத்து, சிருங்கி சத்து சேர்ந்தது 250 கிராம் புட்டி ரூ. 30-00
வெள்ளி ரேக் – பவள சத்து – பஸ்பம் கலந்தது 250 கிராம் புட்டி ரூ. 40-00

(போஸ்டேஜ் இலவசம்)

தேவையானவர்கள் V. P. பார்சல் மூலம் பெறலாம்.

— ஏஜெண்டுகள் தேவை —

தயாரிப்பு: சிவராஜ் சித்த வைத்தியசாலை
(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுரம் எதிரில்)
காந்தி ஸ்டேடியம் சமீபம், சேலம் – 636 007

மகாகவி காளிதாசர் அருளிய

# ரகுவம்சம்

பல தேசங்கட்கும் பரதன் தலைமையில் கரிய நிறத்தைக் கொண்ட அசுவமேதயாகக் குதிரை அனுப்பப்பட்டது. அயோத்திக்கு அருகிலுள்ள கோமதீ தீரத்தில் நைமிசாரண்யக்ஷேத்ரத்தில் யாகசாலை அமைத்து யாகத்தை ராமன் தொடங்கினார். எல்லா அரசர்களும் பொருள்களை யாகத்திற்கு அளித்து உதவினர்.

வால்மீகி முனிவரும்குசலவர்களை அழைத்து கொண்டு அயோத்தி வந்தடைந்தார். நகருக்கு வெளியில் ஆசிரமம் அமைத்து அவர்கள் தங்கினார்கள். உயர்ந்த கனிவர்க்கங்களை உண்டு இளைப்பாறிய பிறகு, களான எங்கட்கு இவை எதற்கு என்று கூறி மறுத்து விடும்படியும் கூறி அவர்களை அனுப்பினார்.

அதன்படியே 500 ஸர்க்கங்களையும் தினசரி இருபது ஸர்க்கம் வீதம் நகரின் பல இடங்களில் கின்னரர்களைப்போன்ற சாரீரத்துடன் லவகுசர்கள் பாடினார்கள். ராமசரிதமும், வால்மீகியின் கவிதையும், குசலவர்களின் கானமும் சேர்ந்து கேட்பவர்களின் மனத்தை பரவசப்படுத்தின. குழந்தைகளின் வடிவழகையும், கானத்தையும் கேள்விப்பட்ட ராமர் தனது சபைக்கு அவர்களை வரவழைத்தார் அவர்களின் பாட்டைக் கேட்டு அந்த சபை அசைவற்று

ஸ்ரீ. குருவாயூரப்பதாசன் - B. சுந்தரராமன், M.A..B.Ed.

மறுநாள் குசலவர்களை அழைத்துக் கொண்டு, தினமும் இருபது ஸர்க்கம் வீதம முனிவர்கள் கூடுமிடத்திலும் மக்கள் மன்றத்திலும் மற்றும் அயோத்தியின் பல பகுதிகளிலும் ராமாயணத்தை பாடும்படி உத்தரவு இட்டார்.

வால்மீகி முனிவர், "அரசர்முன்பு அதிகாரிகள் பாட அழைத்தாலும் பாடிவாருங்கள்" என்றார். ஆனால் எந்த சன்மானம் அளித்தாலும் பெறவேண்டாம் என்றும், யாருடைய குழந்தைகள் என்று கேட்டால் வால்மீகியின் சீடர்கள் என்று மட்டும் கூறுங்கள் என்றார். மேலும் தந்தை என்ற நினைவில் அலட்சியம் செய்துவிடாதீர்கள் என்றும், எதை சன்மானமாக அளித்தாலும் தவசி இருந்தது. ராமனுக்கும் அந்த குழந்தைகட்கும் இருந்த உருவ ஒற்றுமையையும் கவனித்து ஒப்பிட்டு வியந்தனர் அயோத்தி மக்கள்.


குழந்தைகள் கானத்தை கேட்டு மகிழ்ந்த ராமர் குசலவர்களுக்கு நான்குலட்சதம்ங்ககாசுகள் அளிக்க உத்தரவு இட்டார். ஆனால் குழந்தைகள் அதைப் பெற அடக்கமாக மறுத்துவிட்டனர். இதனால் மக்கள் பெருவியப்புக்குள்ளானார்கள் இதனால் மேலும் மகிழ்ந்த ராமன் "உங்கள் குரு யார்?" என்று கேட்டு வால்மீகி என அறிந்து, தமது தம்பிகளின் அனுமதியும் அறிந்து தனது ராஜ்யத்தையே வால்மீகி முனிவருக்கு அர்ப்பணம் செய்தார்.

அதை ஏற்றுக் கொண்ட பின் வான்மீகி, ராமனிடம் குசலவர்களை அறிமுகப்படுத்தி "ஸீதை பெற்ற இந்த இரட்டைக் குழந்தைகள் உன் புதல்வர்களே! இவர்களை ஏற்பாயாக!" என்று கூறினார் ராமனது மௌனத்தைக் கண்டு மனத்திற்குள் சினந்த முனிவர்தன்வார்த்தை அனைத்தும் ஸத்யம் என்று கூறி ஸீதையை ஏற்கும்படியும், உண்மையில் ஸீதை தீயவளாக இருந்தால், தான் பலகோடி வருடங்களாக செய்த தவம் எல்லாம் பயனற்று போகக்கடவது எனவும் சபதம் செய்தார்.

உடனே ராமன், "ஸீதை குற்றமற்றவள் என்று தெரிந்த போதிலும் ஊரார் பழிச் சொல்லுக்கு அஞ்சி அவளை நிராகரித்து விட்டேன். தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும்" என்று முனிவரை வேண்டிக் கொண்டார். "இவர்கள் என் புதல்வர்கள் தான் என்பதையும் நான் முன்பே அறிவேன்" என்றார். இருப்பினும் நான் அரசன் என்ற முறையில் என் மனைவி தன் பாதிவிரத்ய மஹிமையால் எல்லோர் முன்பும் தனது தூய்மையை நிலைநாட்டி என்னை மகிழ்விக்கவேண்டும் என்றார்.

உடனே அரசவையிலிருந்த வான்மீகி தன் சீடர்களை அனுப்பி ஸீதாதேவியிடம் விஷயத்தை தெரிவித்து அழைத்து வரும்படி உத்தரவு இட்டார். இதனால் இனி ஸீதை தன்னைவிட்டு பிரியமாட்டாள் என எண்ணி மகிழ்ந்த ராமர், மக்கள் யாவருக்கும் இச்செய்தியை தெரி

அனைவருக்கும் எமது மனங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்



வித்தார். மௌத்கல்யர் முதலான முனிவர்களும் விசுவாமித்ரரும் அயோத்திக்கு வந்து சேர்ந்தனர்.

மறுநாள், வால்மீகி முனிவர் சிஷ்யர்கள் மூலம் அயோத்திக்கு ஸீதாதேவியை அழைத்து வரச்செய்தார் காவி நிறமுள்ள வஸ்த்ரத்தால் தன் சரீரம் முழுவதும் மறைத்தபடி குனிந்த தலையுடன் நிதானமாக அரச சபையில்'தாயானஸீதாதேவி பிரவேசித்தாள்.

ஆனால் அரசவையில் உள்ளவர்கள் யாவரும் இத்தகைய பதிவிரதைக்கு கொடுமை செய்தோமே என்ற எண்ணத்தால் வெட்கி எங்கே ஸீதாபிராட்டி தங்களை நிமிர்த்து பார்த்துவிடுவாளோ என அஞ்சியவர்களாய், கதிர் முதிர்ந்து தலைசாய்ந்த நெற்பயிர்கள் போல தலைகுனிந்து நின்றனர்.

ஆஸனத்தில் அமர்ந்திருந்த முனிவர் ஸீதாதேவியை பார்த்து "குழந்தாய்! உன் பதிவ்ரத்ய மஹிமையை உன் கணவர் முன்பு நிரூபித்து விடு'' என்று உத்தரவு இட்டார்.

பிறகு, ஸீதை வால்மீகியின் சிஷ்யன் ஒருவனிடமிருந்து கமண்டலுவை பெற்று ஆசமனம் செய்தாள் தலைகுனிந்து நிலத்தை நோக்கிய வண்ணம் "நான் ராமனையன்றி. எவரையும் மனதில் நினைக்காது இருப்பது மெய்யானால், மனதாலும், சொல்லாலும், செயலாலும் நான் ராமனைத் தொழுதுகிடப்பது மெய்யானால், நான் ராமனையன்றி வேற்றியேன் என்பது உண்மையாயின் பூமிதேவியே! எனக்கு இடம் கொடுக்கட்டும்,'' என்று மும்முறை சபதம் செய்தாள்.

ஸீதை இவவாறு சொல்லிமுடித்ததும் பூமி வெடித்து அதில் பாம்புகளின் படங்களால் தாங்கப்பட்டஒரு ஸிம்ஹாஸனத்தில் பூமி தேவி தோன்றினாள். மின்னல் போன்ற பிரகாசத்துடன் கூடிய பூமிதேவி ஸீதையை அன்புடன் அணைத்து வரவேற்று அருகில் அமர்த்திக் கொண்டாள். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். ஸீதையை எடுத்துக் கொண்டு போகவேண்டாம் என்று ராமர் கூறிக்கொண்டு இருக்கும் போதே பூமிதேவி ஸீதையுடன் பூமிக்குள் மறைந்து விட்டாள். பிளந்தபூமி மீண்டும் ஒன்றுசேர்ந்து விட்டது.

வில்லைக் கையில் ஏந்தி பூமிதேவி மீது கோபம் கொண்ட. ராமரை வஸிஷ்டர் சாந்தப்படுத்தினர். பிறகு யாகத்தின் முடிவில் ராமர் ஸினேஹிதர்களையும், மஹரிஷிகளையும் மரியாதை செய்து அனுப்பினர்.

ஸீதையைப் பிரிந்த ராமர் ஸீதையினிடம் வைத்து இருந்த பிரியத்தைதனது குமாரர்களான குசலவர்களிடத்தில் வைத்தார். இதனால் முன்னதாக புத்ரர்கள் என்ற முறையில் ராமனது அன்பைப் பெற்றிருந்த குசலவர்கள் ஸீதையிடம் வைக்க வேண்டிய அன்பையும் சேர்த்து ராமனிடம் இருமடங்கு அன்பைச் சொரிந்தவர் ஆயினர்.

இவ்விதம் யுவராஜ் யாபிஷேகம் செய்யப்பட்ட குசலவர்களுடன் ஸ்ரீராமன் பல ஆண்டுகள் தர்மமாக ராஜ்ய பரிபாலனம் செய்தார். அவ்விதம் இருக்கையில் ஒருநாள் யமன் முனிவரின் வேஷம் பூண்டு ராமனது ஸமீபம் வந்தான் ராமன்தான் யாது செய்யவேண்டும்என்று வினவவே, நான் தங்களுடன் தனித்துப் பேசவேண்டும் என்றும் இதைப் பிறர் கேட்கவோ பார்க்கவோ கூடாது என்றும், அவ்வாறு யாராவது நடுவில் வந்தால் அவனைவதம் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான்.

ஸ்ரீராமனும் அப்படியே ஆகட்டும் என்று பிரதிக்ஞை செய்து யாரையும் உள்ளே அனுமதிக்காது இருக்கும்படி லக்ஷ்மணனை காவலுக்கு நியமித்தார்தான், யமனுக்கு

செய்து கொடுத்துள்ள பிரதிக்ஞையையும் கூறியனுப்பினார். பிறகு யமன் "தாங்கள் பூலோகத்தை விட்டு வைகுண்டம் செல்லவேண்டிய காலம் வந்துவிட்டது" என்று நினைவூட்டினான். அவ்விதம் ஸ்ரீராமனும் யமனும் உள்ளே பேசிக்கொண்டு இருக்கும்போது துர்வாஸ முனிவர் ராமனை உடனே சந்திக்கதாம், விரும்புவதாகவும் தமக்கு வேறு வேலை இருப்பதால் சீக்கிரம் தான் ராமனை பார்க்கவேண்டும் என்றும் லக்ஷ்மணனிடம் தெரிவித்தார். லக்ஷ்மணன் முனிவரின் பாதங்களில் வணங்கி, தாங்கள் ஒரு முஹூர்த்த காலம் பொறுத்தருள வேண்டும் என்றும், தன்னால் ஆகக்கூடியது எதுவாக இருந்தாலும் உத்தரவு இடும்படியும் வேண்டினான்.

அதைக் கேட்டு முனிவர் "லக்ஷ்மணா! தான் உடனே பார்த்தாக வேண்டும், தான் வந்திருப்பதை உடனே ராமனிடம் நீ தெரிவிக்காவிடில், உன்னையும் ராமனையும் மற்றும் உன் சகோதரர்களையும், உங்கள் ஸந்ததிகளையும் இந்த ராஜ்யத்தையுமே சபித்து விடுவேன். தான் இனி கோபத்தை அடக்க முடியாது," என்று கண்களால் பொசுக்குபவர்போல் பார்த்துக் கொண்டு கடுமையாக உத்தரவிட்டார்.

லக்ஷ்மணன் இதன் பலாபலனை யோசித்து தேசத்திற்கே அழிவு ஏற்படுவதைக் காட்டிலும் தான் ஒருவன் இறப்பதே மேல் என்று கருதி உள்ளே சென்று ராமனிடம் துர்வாஸ முனிவரின் வருகையை தெரிவித்தான். அதைக் கேட்டு ராமன் யமனை அனுப்பிவிட்டு, முனிவரை வரவேற்று பூஜித்தனுப்பினார்.

பிறகு யமனுக்குத்தான் தந்த பிரதிக்ஞைப்படி இடையில் லக்ஷ்ம


அனைவருக்கும் எமது புத்தாண்டு தின நல் வாழ்த்துக்கள்

கோவையில் 100 ஆண்டுகளுக்கும் மேலாக

நெய்யினால் தயாரிக்கப்பட்ட இனிப்பு வகைகளுக்கு

பெயர் பெற்ற ஸ்தாபனம்

ORIGINAL VISWANATHA IYER SWEETS

ஒரிஜினல் விஸ்வநாத அய்யர்

நெய் மிட்டாய்க் கடை

*164, ராஜ வீதி : : கோயமுத்தூர் - 1.*

போன் : 25651

னன் வந்ததால் தனது அன்புச் சகோதரனை எப்படிக்கொல்வது என மிக மிக மனம் நொந்தார். லக்ஷ்மணன் தன்னைக் கொன்று வாக்குறுதியை நிறைவேற்றுமாறு ராமனை வற்புறுத்தினான். அவன் சொல்வதற்கு ராமன் முற்றிலும் மறுக்கவே வஸிஷ்டர் "ஸாதுக்கள் விஷயத்தில் தியாகமும் வதமும் ஸமமாகும்" என்று சாஸ்திரம் கூறுவதால், லக்ஷ்மணனை தியாகம் செய்து விடும்படி கூறினார். இவ்விதம் ராமனால் தியாகம் செய்யப்பட்ட லக்ஷ்மணன் அரண்மனைக்கு செல்லாமல் ஸரயூ நதிக்கரைக்கு சென்று ஸ்நானம் செய்து பிராணாயாமத்தால் மூச்சை நிலைநிறுத்தி யோக முறைப்படி தலைவழியாகத் தன் உயிரை விட்டான்.

இதனால் தந்தை வாக்கைக் காப்பாற்ற காடு சென்ற ராமனைவிட தமையன் ஸத்யஸந்தராக உயிரை விட்ட லக்ஷ்மணன் மக்கள் மனதில் மிகவும் உயர்ந்து காணப்பட்டான்.

லக்ஷ்மணனைப் பிரிந்த ராமர் மூன்று பாதங்களுடன் விளங்கும் தர்மதேவதையைப் போல் நிலையின்றிக் காணப்பட்டார். லக்ஷ்மணன் வைகுண்டம் சென்றபின் மனம் ஒடிந்த ராமன் வஸிஷ்டரையும் மந்திரிகளையும் பிரஜைகளையும் ஸபையில் அழைத்து பரதனுக்கு அயோத்தி மன்னராக ராஜ்யாபிஷேகம் செய்துவிட்டு, லக்ஷ்மணன் சென்ற உலகிற்கு தானும் செல்ல நிச்சயித்து விட்டதாக அறிவித்தார். இதைக் கேட்ட பரதன் பிரக்ஞை இழந்து மூர்ச்சையானான் ராமன் அவனை தன் மடியில் கிடத்தி ஆஸுவாஸப்படுத்தினார், மயக்கம் தெளிந்த பரதன் ராமனிடம் ஸத்யமாக பிரதிக்ஞை செய்து தனக்கு ராமனைவிட்டு ஸ்வர்க்கத்திலும் ஆசை கிடையாது என்றும், ராமனை பிரிந்து தன்னால் ஒரு கணமும் ஜீவிக்கமுடியாது என்றும் கூறினான்.

பிறகு ராமன் குசனை, குசாவதியை தலைநகராகக்கொண்டு உத்திரகோசலத்தையும் ஆளும்படி பட்டாபிஷேகம் செய்வித்து தர்மபரிபாலனம் செய்யும்படி ஆக்ஞாபித்தார். அகஸ்தியர் தனக்குத் தந்த திவ்ய கங்கணத்தைக் குசனுக்கு அணிவித்தார்

தான் பூலோகத்தை விட்டு கிளம்பப்போவதை சுக்ரீவன், விபீஷணர் ஆகியோருக்கு சொல்லி அனுப்பினார். அனைவரும் வானரமற்றும்ராக்ஷச வீரர்களுடன் வந்து சேர்ந்தனர்; அயோத்தி மக்களில் பலரும் ராமனுடன் கிளம்ப நிச்சயித்தனர்,

விபீஷணனை இந்தகல்பம்முடியும் வரை ஜீவிக்கும்படி ராமன் உத்தரவிட்டார். ஹனுமானை தன் கதை பூமியில் உள்ளவரை காலங்கழிக்குமாறு உத்தரவிட்டார். அங்கதனை கிஷ்கிந்தையை ஆளுமாறு ஆக்ஞாபித்தார். அவர்களும் கண்ணீர் மல்க ஒப்புக்கொண்டனர்,

பிறகு அனைவரும் ஸ்ரயூ நதியில் மூழ்கி எழுந்தனர். உடனே ராமன் உள்பட அனைவரும் தேவ சரீரம் அடைந்தனர். ப்ரம்மாவால் அனுப்பப்பட்ட திவ்ய விமானத்திலேறி சாந்தாநிகம் என்ற தெய்வ உலகத்தையடைந்தனர் ஸ்ரீராமர் ஸ்ரீவைகுண்டத்தில் தாம் விஷ்ணுவாக இருப்பதோடு சாந்தாநிகம் என்ற தனிஉலகத்தில்ராமபக்தர்களுக்காக ஸீதா ராமசந்திர மூர்த்தியாகவும் காட்சி தரப்போவதாக வரமளித்தார்,

இனி குசன் சரித்திரம் தொடர்கிறது.

(தொடரும்)

அனைவருக்கும் எமது மனங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துகள்

# "லோத்ரா" டானிக் மகளிர்க்கு மட்டும்!



உடல் ஆரோக்கியம் இயற்கை முறையில் பெற மாதத்தில் எல்லா நாட்களும் வேதனையற்ற நாட்களாக இருக்க, தொடர்ந்து "லோத்ரா" டானிக் உட்கொள்ளுங்கள் வேதனையற்ற ஆரோக்கியம் நிறைந்த வாழ்வை பெறுங்கள்

லோத்ரா 75 வருடங்களுக்கு மேலாக பெண்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான டானிக் "லோத்ரா" மருந்துகடைகளில் கிடைக்கும்

இலவச மருத்துவ ஆலோசனைக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு இந்த கூப்பனை பூர்த்தி செய்து உங்கள் கடிதத்துடன் அனுப்புங்கள்.

கேஸரி குடீரம் (பி) லிமிடெட்
18 வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-600 014

பெயர்: ____________________
விலாசம்: ____________________
____________________
____________________ PIN ____________

**கௌரி**

## தேன் கூடு
## சிறு சேமிப்பு திட்டம்

இத்திட்டத்தில் எல்லோரும் சேரலாம். ரூ. 10, 25, 50 என்று மாதாமாதம் சேமிப்பதன் மூலம் சிறந்த நகைகளைப் பெறலாம் ஒருவர் எத்தனை சீட்டுக்கள் வேண்டுமென்றாலும் சேரலாம்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நாணயத்திற்கும், நம்பிக்கைக்கும் பெயர் பெற்றவர்கள்:

**கௌரி ஜுவல்லரி மார்ட்**

72-85, பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை - 600005.

உரிமையாளர்: K. ராமலிங்கம் போன்: 842594

# இந்தியப் பண்பாட்டை மறக்காதீர்!

**ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்**

உணவு, உடை, பாஷை, பழக்க வழக்கங்கள் ஆகிய அனைத்திலும் தொன்மை மிகுந்த இந்திய பண்பாட்டை மறந்துவிடாமல் நம்மக்கள் அனைவரும் நடந்து கொள்ள வேண்டும்.

சுதந்திரத்திற்கு முன்பு தேசிய இயக்கம் நடந்தபோது அந்நியப் பொருட்கள் துணிகள் வாங்கக் கூடாது. சுதேசிப் பொருட்களை அதாவது சொந்த நாட்டு பொருட்களையே உபயோகிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அது வரை விலையுயர்ந்த பட்டாடைகளையெல்லாம் உடுத்துகிற பழக்கத்தைக் கொண்டிருந்த பெரிய ஆசார்ய சுவாமிகள் (ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்) தாம் ஒரு சத்தியாக இருந்தும் தமது பட்டாடைகளையெல்லாம் கழற்றி ராமேஸ்வரம் கடலில் எறிந்தார். கதரையே கட்டுவேன் என்றார். அன்று முதல் கதரையே கட்டுகிறார், யார் யாரோ கதரைக் கட்ட ஆரம்பித்து இப்போது கைவிட்ட நிலையிலும், பெரிய சுவாமிகள் கதரையே கட்டுகிறார். தேசிய மறுமலர்ச்சி மன்றத்தை ஆரம்பித்துவைக்கஇவர்கள் வந்து அழைத்தபோது அந்த வரலாறு என் நினைவுக்கு வந்தது.

சுதந்திரமடைந்து 35 ஆண்டுகளுக்கு பின் தேசியமறுமலர்ச்சிக்கு ஒரு சங்கம் அமைக்கிற நிலை என்றால் இந்த நிலைக்கு நாமேதான் காரணம். தேசீயகலாசாரத்தை பண்பாட்டை மறந்து அந்நிய மோகம் கொண்டதால் இந்த தேவை ஏற்பட்டுள்ளது. தனி மனித வாழ்வாயினும் அரசாங்கமாயினும்சொந்தகலாசார பாரம்பரியத்தை மறந்ததால்தான் இந்த தேவை ஏற்பட்டுள்ளது.

பாரத நாட்டில்எத்தனை மொழிகள் இருந்தாலும் நிர்ப்பந்தம் இல்லாமல், பேதம் இல்லாமல் சகோதர மொழி என்ற நட்புணர்வோடு நடந்து கொள்ளவேண்டும். பாரதநாட்டை மையமாகக் கொண்டதாக நமது சிந்தையும் செயல்களும்அமைந்திட வேண்டும்.

ஹிந்து மதத்தினரானாலும், பிற மதத்தினரானாலும் இங்கே வாழப் போகிறவர்கள். வெளிநாடுகளில் இருப்போரும் துரத்தப்பட்டு வந்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் நாம் ஒற்றுமையாக வாழவேண்டும்.

அரசியலால் இதை சாதிக்கமுடியுமென்று எதிர்பார்த்துக் கொண்டிராமல் நம்மை நாமே தகுதிபடைத்தவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

சின்னஞ்சிறு நாடான ஜப்பான் தேச பக்தியால் எப்படி உயர்ந்துள்ளது என்பதை உணரவேண்டும்.

ஏழை, எளிய குடிசைவாழ் மக்களிடம் உள்ள தெய்வபக்தியையும் நல்லுணர்வையும வெகுவாக பாராட்ட வேண்டும்,

தேசீய ஒருமைப்பாட்டுக்கு முதலில் கொடி உயர்த்தியவர் ஆதி சங்கரர்.

—சென்னை தியாகராயநகரில் தேசிய மறுமலர்ச்சி மன்றத்தை ஆரம்பித்து வைத்து சுவாமிகள் பேசியது.

நடராஜா அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடுபவர், ஆசிரியர்: கே. ராதாகிருஷ்ணன், அலுவலகம், நெ. 78, டாக்டர் பெஸண்ட்ரோடு, சென்னை-14, தமிழ்நாடு. போன்: 846434